
20 காசு

# காஞ்சி

21-9-69 நிறுவனர்: அண்ணாதுரை

உள்ளே....

★


படமும்-பாடமும்!
(தம்பிக்கு மடல்)

சிந்தனைகள்
செயல்பட
வேண்டும்!
(தலையங்கம்)

தெய்வம்
கேட்குமா?
(சிறுகதை)

வாழப்
பிறந்தவர்கள்!
(கட்டுரை)

புண்ணுக்குப்
புனுகுபூசவில்லை...!
(கட்டுரை)

கவிதைகள்!

# தெய்வம் கேட்குமா?

— ஜே. வி. நாதன் —

இரவு.

மழை வரும்போல் சற்றுப் பீதியான சூழ்நிலை.

பளிச்!...பளிச்சென்ற மின்னல்கள். அகிலமே கிடுகிடுக்கும்படி இடியின் பிளிறல் ஒலி! சுழன்றடிக்கும் சூருவளி...

படுத்திருந்தபிள்ளையவர்களுக்கு உறக்கம்வரவில்லை. போர்வையை விலக்கிவிட்டு, தன் கனத்த சரீரத்தைத் தூக்கிக்கொண்டு மெல்ல நடக்கத் தொடங்கினர். அந்தக் கரி பூசினற் போன்ற இரவில் கிராமத்துக் குறுகிய தெருவில் அவர் நடந்து செல்வது குட்டி பூதம் ஒன்று அசைந்து அசைந்து செல்வதைப் போலத் தோன்றியது.

"யாரு?......எசமாஞ?" இந்த ராவுலே எங்க புறப்பட்டீங்க?... நான் கூட துணைக்கு வரட்டுங்களா?" தூக்கம் வராமல் திண்ணையில் புரண்டு கொண்டிருந்த கனகசபை முதலியார் எழுந்து பவ்யமாய்க் கேட்டார்.

இத்தனை இருளிலும் அசைவையும், உருவத்தையும் வைத்தே தன்னை அடையாளம் கண்டு கொண்ட முதலியாரின் திறமையை வியந்த பிள்ளை, "ஒறக்கம் வரலை முதலியார்வாள்! மழை வர்றதுக் குள்ளாற குளத்தங்கரைப் பக்கம் போயிட்டு வரலாமின்னு புறப்பட்டேன். நீங்க உறங்குங்க......எதுக்கு சிரமம்?" என்று கூறிவிட்டுத் தன் பெரிய உருவத்தை மெல்ல அசைத்து மேலே நடக்கத் தொடங்கினர்.

வேலுப் பிள்ளை என்று பெயர் சொன்னலே போதும். கழுத்திலிருக்கிற துண்டு இடுப்புக்கு இறங்கிவிடும்; அவ்வளவு மரியாதை!

ஏழை எளியவர்கள் அவரைக் கண்டால் கையெடுத்துத் தொழுவார்கள். தருமவான், தயாளகுணம் படைத்தவர் என்றெல்லாம் கூறிப் புகழ்வார்கள்!

ஊருக்குள்ளே சண்டை சச்சரவு, அடிதடி என்ருல் வேலுப் பிள்ளைதான் சமாதானம் செய்து வைக்க வேண்டும். ஊருக்குப் பெரிய மனிதர்; நியாய அநியாயம் புரிந்தவர்; நாலும் தெரிந்தவர். நல்லவர்! இப்படியெல்லாம் அவரைப் பேசுவார்கள். திருவிடச்சேரி கிராமத்துக்கே அவர் குட்டி ராஜாவாக விளங்கினர் என்ருல் அது உண்மையான வார்த்தைதான்!

சிலுசிலுப்பான காற்று உடலை ஊடுருவியது. மழை இன்னும் சிறிது நேரத்தில் கொட்டத் தொடங்கி விடும்!

அந்த இருளில் குட்டி ராஜாவைப் போலத்தான் பிள்ளை நடை போட்டுக் கொண்டிருந்தார்.

தெருமுனையில் ஒரு வீட்டின் முன் மாட்டு வண்டி ஒன்று நின்று கொண்டிருந்தது. புடவை வியாபாரி லோகநாதனின் வீடு!

இருளில் பதுங்கி நின்று கவனித்தார் வேலுப்பிள்ளை.

புது ஜவுளி சரக்கு எடுப்பதற்காக லோகநாதன் அடிக்கடி பட்டணத்துக்குப் போய் வருவார். பக்கத்து பெரிய ஊரான நன்னிலத்தில்தான் புகைவண்டி நிலையம் இருக்கிறது. வண்டியைத் தட்டிவிட்டால் நாலுமைல் ஓடி மெயிலைப் பிடித்தாக வேண்டுமே!...

கை விளக்குடன் லோகநாதனை வாசல்வரை வந்து வழியனுப்பி வைத்தாள். அவருடைய இளம் மனைவி! மெல்லிய விளக்கொளியில் அவளுடைய பூரித்த வதனத்தையும் எடுப்பான எழிலையும் கண்டு பெருமூச்சு விட்டார் பிள்ளை. பாவம் அந்தப் பெண்! அவ்வளவு அழகைக் கொடுத்த இறைவன் அப்படியொரு குறைபாட்டையும் அவளுக்கு ஏன் தான் வைத்தானே?......ஆம்; அவள் ஒரு ஊமைப் பெண்.

புடவை வியாபாரி ஏறிய வண்டி 'ஜல்......ஜல் என்ற சதங்கை ஒலியுடன் நகர்ந்தது. ஊமைப்பெண் கற்பகம் வீட்டினுள் சென்றுவிட்டாள். மீண்டும் இருள்...தொடர்ந்து நடக்கலானர் வேலுப்பிள்ளை. அவருடைய நெஞ்சக் குளத்தில் நினைவு அலைகள் விரிந்தன...

இறந்துபோன தன் மனைவியை நினைத்தார். அவளும் இப்படித் தான் போகட்டும் நாட்டியக்காரி நாகமணியை 'வைப்பு' ஆக வைத்திருந்தாரே, அவளாவது நிலைத்தாளா? "நீ லட்டு மாதிரி இருக்கிருய் சினிமாவில் சான்ஸ் கொடுக்கிறேன் வா!" என்று எவனே சேட் ஒருவன் தட்டிக் கொண்டு போய்விட்டான். இல்லாள் இல்லாத வாழ்வு ஒரு வாழ்வா?

பெருமூச்சுவிட்டார் வேலுப் பிள்ளை. உடலே தீப்பற்றி எரிவது போன்ற உணர்ச்சி. அவருக்குப் பசி எடுத்தது ஆமாம் பசிதான்! அகோர பசி!

நெஞ்சில் நினைப்பு உதித்தபின் அதோடு விட்டுவிடுமா? செயல்படுத்தத் துடிக்குமே...ஆமாம், வேலுப்பிள்ளையும் துடிக்கத்தான் செய்தார்.

சுற்றுமுற்றும் பார்த்தார். தன் திருட்டுத் தனமான தீய எண்ணம் சரிதானு? அவர் ஏன் அதையெல்லாம் சிந்திக்கப் போகிருர்? தன் பருத்த உடலுடன் வேலி ஏறித் தாவினர். அந்த வீட்டிற்குள் கள்ள வழியே புகுந்தார், கள்வனைப்போல.

ஒரு அறையில்...

களங்கமில்லாத பால்வடியும் முகத்துடன் படுத்திருந்தாள் ஊமைப்பெண் கற்பகம். கணவன் ஊருக்குச் சென்றிருக்கிற வேளையில் தன்னை ஆபத்து நெருங்குகிறது என்ற உண்மை தெரியாமல் தளிர்க்கொடி போல் படுக்கையில் கண்மூடித் தவழ்ந்திருந்தாள்.

ஒருகணம் வெறித்துப் பார்த்தார் வேலுப்பிள்ளை. அவளுடையகண்ணைக் கொத்தும் கவர்ச்சி...அந்தக் களங்கமில்லாத அழகு முகம்! சிமினி விளக்கொளியில் உலகத்து எழிலெல்லாம் திரண்ட பேரெழில் தேவதையொன்று துயில் கொண்டிருக்கும் காட்சி அவரது தாகத்தைக் கிளறி விட்டது. வேகத்துடன் குனிந்தார். அவளது இதழ்களை நோக்கி......

'பளிச்'சென்று விழித்துக்கொண்டாள் கற்பகம்!

ஒருகணத்தில் நிலைமையைப் புரிந்து கொண்டது அவள் பெண்மை. தன் அரிய பொக்கிஷமான கற்பைக் காத்துக்கொள்ள ஓடினள். வேலுப்பிள்ளை என்ன, சாமானியமானவரா—அறைக்குள் நுழைந்தவுடனேயே முதல்வேலையாகக் கதவைத் தாளிட்டு விட்டாரே! மிரண்ட பார்வையுடன் கூச்சல் போடவும் அறியாது திகைத்து நின்ருள் அவள். அந்த நேரத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டார் வேலுப்பிள்ளை.

(4-ம் பக்கம் பார்க்க)

காஞ்சி
நிறுவனர்: அண்ணாதுரை

மலர் 6 | 21—9—69 | இதழ் 10

# சிந்தனைகள் செயல்பட வேண்டும்!

இந்தியக் குடியரசுத்தலைவர் வி. வி. கிரி அவர்கள் தம் தமிழகச் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு மீண்டிருக்கிறார். ஐந்து நாட்கள் தமிழகத்தில் முக்கியமான பல நகரங்களுக்குச்சென்று சிறப்புக்குரிய பல சொற்பொழிவுகளை நிகழ்த்தி இருக்கிறார்.

இத்திங்கள் 14-ம் நாள் புதுச்சேரி சென்றபோது, அங்கு நிகழ்ந்த ஒரு கூட்டத்தில் தன்னைப்பற்றியும், தன் கடமைகள் பற்றியும் லேசாகச் சுட்டிக் காட்டிப் பேசி இருப்பது சிறப்பான சிந்தனைக் குரியதாகும்.

குடியரசுத் தலைவர் தம் பேச்சின்போது—

> "நான் ஒரு ஜனநாயகவாதி; அரசியல் சாசனத்தின் காப்பாளனான ராஷ்டிரபதி என்ற முறையில் மதிப்புமிக்க பிரதமருக்கும், இந்திய அமைச்சரவைக்கும் எச்சரிக்கை செய்யவும், ஆலோசனைகள் வழங்கவும், யோசனைகளைத் தெரிவிக்கவும் என்னால் முடியும்"

என்று கூறி இருக்கிறார்.

மதிப்புக்குரிய குடியரசுத் தலைவர் அவர்களது தேர்தல் நடைபெற்று முடிந்ததற்குப் பின்னால், காங்கிரசுக் கட்சியின் தலைமைப் பீடத்திலே வீசியபுயல் இன்னமும் ஓய்ந்து படாமல், புயல் மீண்டும் வரலாம் என்று யூகிக்கக் கூடியவகையில் நிலைமைகள் இருந்து கொண்டிருக்கிற சமயம் இது.

இந்த நேரத்தில், கிரி அவர்களது பொருட்செறிவு மிக்க பேச்சு, நாட்டின் நலனிலும், வாழ்விலும் அக்கறை கொண்டோர் அனைவரையும் ஆறுதல் படுத்தக் கூடிய வகையில் அமைந்திருப்பது, இன்னமும் இந்த நாட்டில் அமைதிச் சூழலை உண்டாக்கும் வாய்ப்பு இருக்கிறது என்று நம்பக் கூடிய வாய்ப்பினை நல்குவதாகும்.

குடியரசுத் தலைவரின் கட்டளைகளுக்கு ஆட்சித் தலைவர் கட்டுப்படுவதா? அல்லது ஆட்சித் தலைவரின் கட்டளைகளுக்குக் குடியரசுத் தலைவர் கட்டுப்படுவதா? என்ற கொள்கைக் குழப்பங்கள் நேருவின் காலத்திலேயே பிறந்திருந்தாலும், முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் ஒருமுறை குடியரசுத் தலைவர் என்பவர் வெறும் ரப்பர் ஸ்டாம்ப்பாக இருக்கக் கூடாது; இப்போது அதுபோன்ற நிலையே இருக்கிறது என்று குறிப்பிட்டதைப்போல, இதுவரையில் நிலைமைகள் எப்படி எப்படி இருந்தாலும், ஆட்சித் தலைமைக்கு ஆலோசனைகளும், யோசனைகளும் வழங்க தன்னால் முடியும் என்று கூறி இருப்பது, மிகப் பெரிய ஆறுதல் தரக் கூடியதாகும்.

நாட்டின் இன்றைய யதார்த்த நிலை, ஆட்சித் தலைமையும்சரி, அந்தத் தலைமையைக் கட்டுப்படுத்தி வைக்க விரும்பிச் செயல்படும் கட்சித் தலைமையும்சரி மாற்றாது ஆலோசனைகளைக் கேட்டு இயங்க வேண்டிய நிர்ப்பந்தமான நிலைமைக்குச் சரியாகவோ, தவறாகவோ ஆட்பட்டுவிட்டிருக்கிறது.

50 கோடிக்கும் அதிகமான நாட்டு மக்களது வாழ்வுப் பிரச்னையைவிட, அவர்களை ஆளும் பொறுப்பில் யாருக்கு அதிக அதிகாரம் என்ற வகையிலே முகிழ்த்த கட்சிப் பிரச்னைகளால் துணைக் கண்டம் நிலைகுலைந்திருந்தது. அந்த நிலை இப்போது முழுதாக மாறிவிடா விட்டாலும் பிரச்னையின் சூடு தற்காலிகமாக தணித்து வைக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில், மதிப்புக்குரிய குடியரசுத் தலைவரின் பேச்சு மூலம் கிடைத்திருக்கிற செய்தி, நம்மை மகிழ்விக்கச் செய்கிறது.

குடியரசுத் தலைவரின் பதவியில் அமர்ந்திருப்பவர், கட்சி மாச்சரியங்களைக் கடந்தவராக இருக்கவேண்டும் என்று பொதுவாகவே கூறப்பட்டாலும், திரு. கிரி அவர்களே, தம் தேர்தலுக்கு முன்னால் இக் கருத்தை வலியுறுத்திக் கூறி இருக்கிறார்கள்.

அந்த அடிப்படையில், ஆலோசனைகளைப் பெற்றுச் செயல்படவேண்டிய நிலையிலிருக்கும் ஆட்சித் தலைமைக்கும், கட்சித் தலைமைக்கும் நல்ல யோசனைகளை வழங்கி, நாட்டில் அமைதிச் சூழலையும், தனிமனிதனின் நம்பிக்கை ஒளியையும் தோற்றுவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

திரு. கிரி அவர்கள் சேலத்தில் கலந்துகொண்ட நிகழ்ச்சியின்போது தமிழக சட்டஅமைச்சர் மாண்புமிகு மாதவன் அவர்களும் கலந்துகொண்டு சில கருத்துக்களை, குடியரசுத் தலைவர் அவர்களின் கவனத்துக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். சட்ட அமைச்சர் அவர்கள், ஒருமைப்பாடுபற்றிக் குறிப்பிட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், அதன் ஆட்சிக்கும் நாட்டின் ஒற்றுமையில் உள்ள அக்கறைபற்றி விளக்கிவிட்டு, தமிழர்தம் மொழியும், தமிழர்தம் பண்பாடும், தமிழர்தம் கலாசாரமும் குன்றாத அளவுக்கும், சுயமரியாதைகள் பாதிக்கப்படாத அளவுக்கும் அந்த ஒருமைப்பாடு முயற்சிகள் இருக்கவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டி விளக்கமளித்திருக்கிறார்கள்.

இந்தியத் துணைக்கண்டத்தின ஆட்சித் தலைமைக்கும், அந்த ஆட்சியின் கட்சித் தலைமைப் பீடத்துக்கும் நன்றாகப் படும்படி எடுத்து விளக்கித் தீரவேண்டிய சிறப்புக் குரிய விளக்கங்களாகும் அவை.

இந்தியத் துணைக்கண்டத்தின் மொழிச் சிறுபான்மை இனங்கள், ஒருமைப்பாடு என்பதன் பேராலும் இணைப்புமொழி என்பதன் பேராலும் எவ்வாறெல்லாம் நசுக்கப்படுகின்றன என்பதை, ஆட்சித் தலைமைக்கு குடியரசுத்தலைவர் நிச்சயம் எடுத்துக் காட்ட வாய்ப்புண்டு.

இடிப்பாரை இலாத ஏமரா மன்னர்களாக இதுவரையில் இருந்துவந்த தன்மைக்கு இனியாவது ஒரு முடிவு காணும் முயற்சியில் குடியரசுத்தலைவர் அவர்கள் இறங்கக்கூடும் என்று நம்பத்தக்க வகையில் அவரது புதுச்சேரி பேச்சு அமைந்திருப்பது அறிந்து மனமார மகிழ்கிறோம்.

★

3-ம் பக்கத் தொடர்ச்சி

பாய்ந்து அவள் கரத்தைப்பிடித்தார். திமிரி அவள் விடுவித்துக் கொள்ளுமுன்னர் 'பளிச் பளிச்' சென்று அவள் கன்னத்தைக்கறையாக்கிவிட்டார்.

அடுத்த கணம்—

மதுரை மாநகரத்துக் கண்ணகி இப்படித்தான் ஆவேசம் கொண்டிருப்பாளோ!......பாய்ந்தாள் கற்பகம். தன் சக்தியை யெல்லாம் திரட்டி அருகிலிருந்த இரும்புத் தடியை எடுத்து வீசினாள். அவருடைய முன் மண்டையில் பட்டு நழுவியது. சிறிது தவறிவிட்டிருந்தால் பிள்ளையின் மூளை சுக்கு நூறாகியிருக்கும். "ஐயோ!......" கதறிக்கொண்டே திரும்பி ஓடினார் வேலுப்பிள்ளை.

தன் புனிதத்தைக் காத்துக் கொள்ள உடலில் வலு இல்லாவிட்டாலும் இம்மாதிரி சமயோசிதம் கூடவா அறியமாட்டாள்? அவள் ஊமையானாலும் 'தமிழ்ப் பெண்' அல்லவோ!

* * *

பொழுது விடிந்தது.

பிள்ளைக்கு முன் மண்டையில் 'விண் விண்'ணென்று வலிதெறித்துக் கொண்டிருந்தது. இரவு முழுவதும் உறக்கமே கிடையாது. அக்கம் பக்கத்தார்களை அழைத்துக்கொண்டு தன் அநீதிக்குப் பழி வாங்க அவள் வந்து விடுவாளோ என்ற பயம்!

நெற்றி நிறையத் திருநீறு பூசி, தேவாரத்தை வாயாரப்பாடியபடி வீட்டினுள் அமர்ந்திருந்தார் வேலுப்பிள்ளை. தடதடவென்று நாலைந்துபேர் ஆவேசமாகக் கத்தியபடி உள்ளே நுழைந்தார்கள். 'திக் திக்' கென்று அடித்துக் கொள்ள, "வந்தது ஆபத்து!" என்று மனதில் அசரீரி குரல் கொடுத்தது. எழுந்துகொல்லைப்புற வழியாய் ஓடி விடுவோமா?..." நடுக்கத்துடன் சுற்று முற்றும் பார்த்தார்.

யம கிங்கரர்கள் மாதிரி வாசலை அடைத்துக் கொண்டு நின்றிருந்தது கூட்டம்.

"எசமான்! இது அநியாயமுங்க...அடுக்காதுங்க!" என்று ஒரு ஆத்திரமான குரல்.

"நம்ம ஊரிலேயேவா இந்த அக்கிரமம்?...சேச்சே!" இன்னொருவர் கத்தினார்.

சப்த நாடிகளும் ஒடுங்கிக் குற்றவாளியாய் நின்றார் வேலுப்பிள்ளை.

வந்திருந்த மனிதர்களில் இரவு தன்னை தூக்கம் வரவில்லையா என்று கேட்ட கனகசபை முதலியாரும் இருப்பதைக் கவனித்தார்.

"எசமான்! நீங்களே சொல்லுங்க...நம்ப ஊரிலே இந்தமாதிரி அநியாயம் நடந்ததுண்டுங்களா? ...இப்ப இந்த அக்ரமம் நடந்ததுக்கு நாம எங்கே போய் முகத்தை வெச்சுக்கறதுன்னே தெரியலே...?" என்று கனகசபை மொழிந்ததைக் கேட்டதும் வேலுப் பிள்ளைக்கு உயிர் வந்தது. 'இன்னும் அந்த விஷயம் வெளியாகவில்லை—இது வேறு விஷயம் போலிருக்கிறது!'

"எல்லோரும் ஒக்காருங்க. நிதானமா விஷயத்தைச் சொல்லுங்க. ஆளுக்கு ஆள் கத்தினால் எப்படிப் புரிஞ்சுக்கறது?... முதலியார்வாள், நீங்களே சொல்லுங்கள்! என்ன நடந்தது?"

முதலியார் முன்னே வந்து கூறினார்:

"நம்ப புடவை வியாபாரி லோகநாதன் இல்லீங்க, அவன் ராவு பட்டணத்துக்கு சரக்கு போடக் கிளம்பிப் போயிருக்கான். அவன் போனதுக்கப்புறம் அவன் வீட்டிலே இல்லைங்கற உளவு தெரிஞ்சு வேலியை முறிச்சுப் போட்டு எவனோ வீட்டுக்குள்ளே புகுந்து தனியாயிருந்த அவன் சம்சாரத்து கிட்டே முறை தவறி நடந்திருக்கான். படுக்கை அறையில் சாமான்கள் இரைந்து கிடக்கு. அந்தப் பொண்ணு பாவம், ஊமையானாலும் ரொம்பவும் மானமுள்ள பொண்ணு! தூக்குப் போட்டுக் கிட்டு செத்துவிட்டாள்! நம்ம ஊரிலே இப்படி ஒரு அநியாயம் நடக்கலாமா? நீங்க பெரியவங்க, ஊரிலே நியாயம் சொல்றவங்க. அந்த அக்ரமக்காரன் யாருன்னு விசாரிச்சுக் கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டியது ஒங்க பொறுப்பு!..."

வேலுப் பிள்ளை சிலையாக நின்றார்.

"கற்பிலும் இத்தனை உயர்ந்த வகையா? வெறும் உதட்டு எச்சில் பட்டதுமே கற்பு பறிபோய் விட்டதென்று தன்னையே மாய்த்துக் கொண்ட அந்த ஊமைப் பெண் எத்தனை உயர்ந்தவள்! அதற்குக் காரணமான நான் ஒரு பாவி, பாவி!"

ஒரு கணம்தான் அறிவு பூர்வமான சிந்தனை...அடுத்து—

"ஏன்யா? நீங்க எல்லோரும் நடந்ததைக் கண்ணாலே பார்த்த மாதிரி சொல்றீங்களே......பார்த்தீங்களாய்யா?" சீறினார் பிள்ளை, வேலி முறிஞ்சு கிடக்கறதையும், அறை அல்லோகலப்பட்டுக் கிடக்கறதையும், வெச்சு எவனோ உள்ளே புகுந்து முறைகேடா நடந்து கிட்டதாகவும், அதுக்காக அந்தப் பொண்ணு தற்கொலை செய்து கிட்டதாகவும் கதைகட்டிவிடறீங்களே...ஏன்யா இந்தப் பாவம் உங்களுக்கு? அந்தப் பொண்ணுக்குத் தாங்க மாட்டாத வவுத்து வலியாக இருக்கலாம். வலி தாங்காம அறைக்குள்ளே விழுந்து துடிச்சிருக்கலாம். பிற்பாடு தூக்கு மாட்டிச் செத்திருக்கலாம்...அப்படியிருக்க நீங்களா ஏதோ கதை கட்டிவிடறீங்களே! ஏன்யா கணக்கப்பிள்ளை, சொல்லுமேன்? நான் சொல்றபடியும் நடந்திருக்கலாம் இல்லையா?..."

மேட்டுவளையைப் பார்த்துத் திகைத்தார். தலையைச் சொறிந்தார். பின் கணக்கப்பிள்ளையுடன் மற்றவர்கள் தலையும் சேர்ந்து தானாகவே ஆடியது. "நீங்க சொல்றதும் நியாயமாப் படுதுங்க!"

வேலுப் பிள்ளையின் வாய் ஜாலத்தை அத்தனைப் பேரும் நம்பினர். படிப்பறிவும் சுய சிந்தனையும் அற்ற வெறும் செம்மறியாட்டு மந்தைகள்தானே அவர்கள். ஆட்டு மந்தையை ஆட்டுவிக்கும் விதம் அறிந்த வேலுப் பிள்ளை போன்றோரின் வெற்றியில் என்ன வியப்பு இருக்க முடியும்? "நமக்கு மூளையே இல்லைடா......எசமான் எவ்வளவு சரியாப் புட்டு வெச்சுப் புட்டார் பார்த்தியா?..." என ஆளுக்கு ஆள் பேசியபடி நகர்ந்தனர்.

ஒரு கற்புக் கரசியைப் பலி வாங்கியும் இரக்கம் அற்ற நெஞ்சத்துடன் கல்லாக அமர்ந்து அதோ 'தேவாரம்' படித்துக் கொண்டிருக்கிறாரே பெரிய மனிதர்...எசமான்...ஐயா!' என்றெல்லாம் விளிக்கப்படும் வேலுப் பிள்ளை—அவரைப் போன்ற போலிப் பெரிய மனிதர்கள்—பாவிகள்—நம் நாட்டில் எத்தனை எத்தனையோ பேர்!

வேலுப் பிள்ளையின் வாய் திரும்பத் திருப்ப உச்சரிக்கும் சொல்லைக் கேளுங்கள். "முருகா!...முருகா!" என்று இறைவனின் நாமத்தைச் சொல்லிக் கூவுகிறார். அந்த இறைவன்தான் அவரைக் கேட்க வேண்டும்.


இறைவன் கேட்பானா? ●

# தம்பி

"கண்ணே! காதற்கனியே! இன்னும் ஓர் திங்களில் நான் வந்து சேருகிறேன். தென்றலும் திங்களும், தென்மொழியாளே! உன்னைத்தான் வாட்டுகின்றன என்று எண்ணாதே; என்னை அவை இரண்டும் ஈட்டியெனக் குத்துகின்றன. எனினும், என் அன்பே! உனக்கு, முத்துமாலையும் தங்க வளைகளும், உன் அழகுக்குத்தக்கதான அணிபணி பலவும் பூட்டி அழகு கண்டு பெருமைப்படத்தானே, நான் இங்கு அல்லும் பகலும், கொல்லும் நினைப்பினையும் ஒருபுறம் நிறுத்திவைத்தபடி, பாடுபல பட்டவண்ணம் இருக்கிறேன். பால் வண்ண நிலவே; விரைவில் வருகிறேன்! நான் உனக்குக் கொண்டுவர இருக்கும் அணிகளை அணிந்துகொண்டு, அன்னமென நீ நடந்துசெல்ல, ஆரணங்குகள் பலரும் உன்னைக்கண்டு பெற்றாள் பெருமைக்குரிய மணாளனை! அதனால் அழகு மயிலாள் ஆனந்த வாழ்வு பெற்றாள்! என்று புகழ்ந்துரைக்கக் கேட்டு, அன்று உன்னை, முதன் முதலாக முந்திரிச் சோலையிலே, அந்திசாயும் வேளையிலே தொட்டிழுத்து முத்தமிட்டேனே துணிவுடன், நீயும், துரையே! இதென்ன முடுக்குத்தனம் என்று, கொதித்துக் கூறுவதுபோலத் துவக்கி, மறுகணமே புன்னகையுடன் என் மார்பகத்தில் சாய்ந்தனையே, அன்று கண்ட இன்பத்துக்கு இணையான இன்பம் பெறுவேன்! அதற்கே, இந்தப் பிரிவு! அஞ்சாதே! நெஞ்சில் உறைபவளே! வழிமேலே விழிவைத்துக் காத்துக் கிடக்கிறாயே, கொஞ்சி! உன்னைவிட்டுச் சென்றவன், அப்படி என்னதான் கொண்டுவந்து உன்முன் குவித்திடப் போகிறானோ! என்று மகளிர் சிலர் எள்ளி நகையாடிப் பேசுவதாகக் குறித்திருக்கிறாய். கேலி பேசிய அந்தப் பாதி மதியினர், அகலக் கண் திறந்து ஆச்சரியம் கொள்ளத்தக்க விதத்தில், நான் உனக்கு, ஆடை அணி கொண்டுவந்து தருகிறேன். தந்து, உன்னிடமிருந்து பெறவேண்டியதைப் பெறுகிறேன்!!

பொருள் தேடச் சென்ற தலைவன். பிரிவாற்றாமைப் பெருந்துயரில் சிக்குண்ட தலைவிக்கு இதுபோலன்றோ மடல் எழுதுவான். ஏந்திழையின் உள்ளத்திலே எத்தனை எத்தனையோ சுவைமிகு எண்ணங்கள் கூத்தாடும். பிறகோர் நாள், திரும்பிய தலைவன் தலைவிக்கு எண்ணற்ற முத்தங்களைத் தந்து [illegible] தேன்மொழியாளே! உனக்கென நான் ஏதேதோ தேடிப் பெற்றுவர வேண்டுமென்று படாத பாடுபட்டேன், எனினும் உன் அழகுக்கு ஏற்ற அணிபணி கொண்டுவந்தேனில்லை; முயன்று பார்த்தேன், முடியவில்லை! செல்வம் குவிந்திடும் செய்தொழிலால் என்று எண்ணினேன்; ஆனால் ஏய்ப்பவன் இழுத்த பக்கமே செல்வம் செல்கிறது; உழைப்பவனை உதாசீனம் செய்கிறது என்ற உண்மையைத்தான் கண்டேன்; உனக்கு ஏமாற்றம் தருகிறேனே என்று எண்ணும்போது, துக்கம் துளைக்கிறது, வெட்கம் வேலாகக் குடைகிறது; என் செய்வேன்! என்றால், உனக்கென்று கொண்டுவர முடிந்தது இது ஒன்றுதான்" என்று கூறியபடி, அவளிடம் ஒரு கைவளையோ காலுக்குத் தண்டையோ, கூந்தலிற் செருகிக்கொள்ள ஒரு திருகோ, கழுத்திலே பூட்டிக்கொள்ள ஒரு மாலையோ, மட்டும் கொடுத்திடுகிறான் என்றால், அவன் இதய ராணி,

## படமும் பாடமும் (2)



# காதலன் தந்த கைவளையும், காதணியும்....

"செச்சே! இதுதானா! இவ்வளவுதானா! உமது ஆற்றல் இதற்குத்தானா பயன்பட்டது! இந்த இலட்சணத்துக்கா, ஈராறு மாதங்கள் உழைக்கிறேன், உழைக்கிறேன் — கொண்டுவந்து குவிக்கிறேன் குவிக்கிறேன் என்றெல்லாம் கூறிக்கூறி என்னை ஏய்த்து வந்தீர்! எங்கோ வெளியூர் சென்றிருக்கிறார் மணவாளர், எனக்காகக் கரியும் பரியும் கட்டித் தங்கமும் கல்லிழைத்த நகைகளும் கொண்டுவரப்போகிறார் என்றெல்லாம் கூவிக்கிடந்தாயே, விவரமறியாதவளே! உன் கணவன் கொண்டுவந்தது இதுதானா!! என்று என் தோழிகள் கேலி பேசுவரே என்றெல்லாமா, பேசுவாள்! "அன்பே! திரும்பி வந்து உமது அன்பைப் பொழிந்தீரே, அது போதும் எனக்கு! உமது புன்னகையை எனக்களித்து விட்டீர், அதனினும் மேலான அணியும் பணியும் அவனியில் உண்டா? இந்த நகைகூட, எனக்கு நீர் கொண்டுவந்திராவிட்டாலும், நான் வருத்தப்பட்டிருக்க மாட்டேன்! எனக்கு, ஏதேதோ அணிபணிகள்பெற்றுத் தரவேண்டும் என்பதற்காக அல்லவா, கண்காணா நாடு சென்று கடினமான உழைப்பிலே ஈடுபட்டீர், எவ்வளவு அன்பு, உமக்கு என்னிடம் என்று எண்ணும் போதே என் உடல் புளகாங்கிதமாகிவிடுகிறது—என்றல்லவா கூறுவாள்.

அதுபோலத்தான் தம்பி! நூறு இடங்களுக்குமேல் தேர்தலில் போட்டியிட்ட நாம் 15 இடங்களை மட்டுமே பெறமுடிந்தது, என்று துக்கத்துடனும் வெட்கத்துடனும், எடுத்துக் கூறும்போது, நாட்டிலுள்ள நல்லோர், ஆயாசப் படவேண்டாம்! கிடைத்தது குறைந்த அளவு என்றால் என்ன! உங்கள் முயற்சியின் தரத்தையும் திறத்தையும் கண்டு நாங்கள் மகிழ்கிறோம்! பெற்ற வெற்றி, பெற்றிருக்க வேண்டிய வெற்றியை கவனப்படுத்துவதாக அமைகிறது. கவலைப் படவோ, கலக்கமடையவோ அல்ல! என்று கூறி, நம்மை ஊக்குவிக்கிறார்கள், உற்சாகப்படுத்துகிறார்கள்! நமக்கு—அதிலும் குறிப்பாக எனக்கு இவ்வளவு குறைந்த அளவு மட்டுமே கிடைத்ததே என்ற எண்ணம் ஒவ்வொரு கணமும் நெஞ்சைக் குடைகிறது—என்றாலும், இந்த வெற்றியை எங்ஙனம் காதலன் கடும் உழைப்புக்குப் பிறகு, கொண்டு வந்து கொடுத்திடும், கைவளையையோ, காதணியையோ, அன்பின் காணிக்கை என்றமுறையில், காதலிபெற்றுஅகமகிழ்ந்து பூரிப்படைவாளோ, அதுபோலவே நாம் பதினைந்தே இடங்களிலே மட்டுமே பெற்ற வெற்றியை, நல்லோர், பெருமைக் குரியதாகக் குறிப்பிட்டு, நம்மைப் பாராட்டுகிறார்கள்.

மலையைக் கல்லி எலியைப்பிடித்தனர்! என்று நம்மைப்பற்றிக் கேவலமாகப் பேசுவோர் இருக்கத்தான் செய்கிறார்கள்—நாடு என்றால், நல்லதும் கெட்டதும், நொந்ததும் வெந்ததும் பலபட இருக்கத்தானே செய்யும். நல்லோர், கூறுவது, மலையைக் கல்லி, எலியைப் பிடித்தார்கள் என்பதல்ல: மலையைக்கல்ல முடிந்ததே, கிடைத்தது எலிதானே என்று கவலைப்படத் தேவையில்லை: மலையைக் கல்லும் ஆற்றலையும் கல்ல முடியும் என்ற நம்பிக்கையையும் பெற்றீர்களல்லவா அது சாதாரணமானதல்ல; பெற்ற வெற்றி, இனிப் பெறவேண்டிய வெற்றிக்கு அச்சாரம் என்று கொள்ளுங்கள்; முறை புரிந்துவிட்டது, இனி அடுத்த முயற்சி பலன் அதிகம் பெற்றுத் தரும், என்று கூறி வாழ்த்துகிறார்கள்.

மலையைக் கல்லினோம்—எலிதானே கிடைத்தது, என்று நானே கூடச் சிறிதளவு சோகமாகக் கூறும் போது, அந்த நல்லவர்கள், "இதற்கேன் கவலைப்படுகிறாய்! என்றுமே உன்னைப்பற்றியும் உன் முயற்சிகளைப் பற்றியும் குறைத்து மதிப்பிட்டுக்கொண்டு, இழிமொழியைக் கக்கிக்கக்கி தமது நெஞ்சிலே உள்ள பாரத்தைக் குறைத்துக்கொள்ளுபவர்கள்தானே இப்போதும், மலையைக் கல்லினார்கள் எலிபிடித்தார்கள் என்று ஏளனம் செய்கிறார்கள்—சொல்லட்டுமே அதனால் என்ன. மலையைக் கல்லினார்கள், எலியைப் பிடித்தார்கள் என்று அவர்கள் சொன்னால், வலையை விசினார்கள் பாசியைப் பெற்றார்கள்; குப்பையைக் கிளறினார்கள்; குண்டுசியைக் கண்டெடுத்தார்கள் என்று ஏதாவது திருப்பிச் சொல்லி விட்டுப் போயேன், என்று கூடச் சொல்லித் தருகிறார்கள். நான்தான் தம்பி! பதில் கூறிக் காலத்தை வீணாக்கிக்கொள்வதில்லையே!! அதனால் மலையைக் கல்லி எலி பிடித்தார்கள்; மண்ணைக் கவ்வினார்கள், செம்மையாக உதைப்பட்டார்கள் என்றெல்லாம், சிலர் பேசுவது கேட்டு, பதில் அளித்திடாமல், அவர்கள் அவ்விதமாக பேசுவதை நாம், நமது கழகத்துக்கு எந்த வகையிலே பயன்படுத்திக் கொள்வது என்ற ஆராய்ச்சியிலே ஈடுபடுகிறேன், அது பலன் அளிக்கிறது; நிச்சயமாகவே!!

நாடு, நாம் பெற்ற இடங்கள் பதினைந்து என்ற போதிலும், அது குறித்துத்தான் பேசுகிறது—ஏன் இவ்வளவு குறைவாகப் பெற்றார்கள் என்று ஒரு சாராரும் —இவ்வளவுதானா பெறமுடிந்தது என்றுமற்றோர் சாராரும்-இவ்வளவுகூட எப்படிக்கிடைத்தது என்றுவேறோர் சாராரும்—இவ்விதம் பல்வேறுவகையாக—நாடு பேசுகிறது!! இதன் பொருள் என்ன? நாட்டவரின் விழி, நம்மீது இருந்த வண்ணம் இருக்கிறது, என்பதல்லவா பொருள்!

அந்த 'நிலை'யை அடைவதென்பது, சாமான்யமானது அல்ல, என்பதை அரசியல் தெளிவு படைத்தவர் அனைவரும் அறிவர். அந்த 'நிலை'யைப் பெற முடிந்தது நமது கழகத்துக்கு, நாட்டு மக்கள் கூர்ந்து நோக்கி, மதிப்பிட்டுப் பார்க்கத்தக்க கட்டம் வந்திருக்கிறது என்பதனால்தான் நாட்டிலே உள்ள நல்லவர்கள், பதினைந்து இடங்களிலே நாம் பெற்ற வெற்றியை, காதலன் தன் காதலிக்குத் தந்த பரிசுப் பொருள் போன்றது என்ற முறையில் மகிழ்ந்து கொண்டாடி, வரவேற்பளித்து வாழ்த்துகிறார்கள்.

வாட்போரில் ஈடுபட்ட இரு வீரர்களில், வென்றான் ஒருவன், வீழ்ந்தான்; மற்றவன் என்றால், வீரமரபு அறிந்தவனாக வென்றவன் இருந்தால், வீழ்ந்தவனை கேலி செய்யமாட்டான்; வீழ்ந்துவிட்டான் இம்முறை எனினும், அவன் நல்ல திறமை பெற்றிருக்கிறான், மிக மிகக் கஷ்டப்பட்ட பிறகே அவனை வீழ்த்த முடிந்தது, வீச்சு முறை நேர்த்தியாக இருக்கிறது. மேலும் சிலகாலம் பயிற்சி இருந்தால், நம்மை நிச்சயம் வீழ்த்தியிருப்பான் என்று எண்ணிக்கொள்வான். இடி இடியெனச் சிரித்து, ஏடா [illegible]டா, என்னிடமா போரிடத் துணிந்தாய்! என் வாள் வீச்சுக்கு முன்பு நீ எம்மாத்திரம்? பிழைத்தோடிப் போ! இனி, உன் கரத்தால் கத்தியைத் தொடாதே!—என்று கடுமொழியைச் செருக்குடன் வென்றவன் பேசுகிறான் என்றால், அவன் வீர மரபு அறியாதவன் என்று விவேகிகள் கூறுவார், தம்பி! வென்றவன் நம்மைப்பார்த்து வீழ்ந்தவனே! என்று கேலி பேசிடக்கூட இல்லை!

# குறைத்து மதித்தனர் நிலைமை உணர்ந்தனர்

ஆனால் 'வென்றவனுடன் இருந்தோம்' என்பதைப்பெறுவதற்கரிய விருது என்று எண்ணிக் கொள்பவர்கள். நம்மை கேலி பேசுகின்றனர், வீழ்ந்தாயா! வீழ்ந்தாயா! செம்மையாக விழுந்ததா அடி!! ஹை, ஹை! ஹி, ஹி! ஹா, ஹா! என்று கூவுகிறார்கள்—அதனை வீர முழக்கம் என்று வேறு எண்ணிக் கொள்கிறார்கள்.

வீரர் இருவர் குறித்த எடுத்துக் காட்டினைத் தொடர்ந்து கற்பனை செய்து பார், தம்பி! வென்றவன், வீழ்ந்தவனுடைய வீச்சுத் திறமையை வியந்துகொண்டிருக்கும் வேளையில், வேறோர் ஆசாமி அங்கு வந்து, கெக்கலி செய்தபடி "வீழ்ந்தாயா, வீழ்ந்தாயா! வேண்டும்! வேண்டும்! தலை வேறு உடல் வேறு ஆகியிருக்க வேண்டும், ஏதோ தப்பித்துக் கொண்டாய்! வாட்போர் ஒரு கேடா உனக்கு!" என்று கேலி பேச, "ஐயா! யாரோ நீவிர்' என்று வீழ்த்தப்பட்ட வீரன் கேட்கும் போது, "தெரியவில்லையா பயலே! நான்தான் உன்னை வீழ்த்திய வீரன் கை வாளுக்குத் தைலம் பூசியவன்! இப்போது தெரிந்துகொள், நீ, யாரால் தோற்கடிக்கப்பட்டாய் என்பதை" என்று கூறினால், வென்றவன், வீழ்த்தப்பட்டவன் எனும் இரு வீரருமேயன்றோ, கை கொட்டிச் சிரித்தபடி, 'பலே! பலே! வீரதீர கெம்பீரச் சிங்கமே! வாழ்க! வாழ்க!" என்று கூறுவர்.

அதுபோலத்தான், 150 இடங்களைப் பிடித்த காங்கிரஸ், 15 இடங்களை மட்டுமே பெறமுடிந்த, நம்மிடம் வாள் வீச்சுத் திறமை வகையாக இருக்கிறதே என்றெண்ணி வியந்துகொண்டிருக்கும் வேளையில், காங்கிரசுக்குத் தேர்தல் களத்திலே வாளுக்குத் தைலம் பூசிக்கொடுக்கும் திருப்பணியாற்றியவர்கள், "வீழ்ந்தாயா! வீழ்ந்தாயா! என்று நம்மை நோக்கி நையாண்டி செய்கிறார்கள். காங்கிரசும், இந்தக் 'கேலி கூத்து' கண்டு கைகொட்டித்தான் சிரிக்கிறது! நாம் அதுகூடச் செய்வது, நேரக்கேடு என்று கருதி, 150-இடங்களைக் காங்கிரசினால் எப்படிப் பெற முடிந்தது, நாம் ஏன் 15 இடங்களை மட்டுமே பெற்றோம், நமது முறையிலே என்ன கோளாறு இருக்கிறது, என்பதைக் கண்டறிந்து, எதிர்காலத்துக்கான காரியத்தை உருவாக்குவதிலே ஈடுபடுகிறோம்.

150 இடங்களிலே வெற்றி பெற்ற காங்கிரசுக்கு' நிச்சயமாகத் தெரியும் பதினைந்தே இடங்களைப் பெற்ற நமது கழகம், எந்த அளவுக்குத் தேர்தல் களத்திலே திறமையைக் காட்ட முடிந்தது, என்ற உண்மை; இடையே இருந்தவர்கள். யாதறிவர் பாபம்! அவர்கள் அறிந்ததெல்லாம், ஆத்திரம் தீரத் திட்டித் தீர்த்தோம்! ஆபாச அகராதியை ஒப்புவித்துக் காட்டினோம்! அதுவும் மற்றவர் செலவில்!! என்பதுதான்—வேறு என்ன! காங்கிரஸ் அபேட்சகர்களுக்கல்லவா தெரியும், பட்ட கஷ்டம், கொட்டிய பணம்; கால்கடுக்கச் சுற்றியவர்களுக்குத்தானே எரிச்சல் தெரியும்—கையும் மனமும் வலிக்க வலிக்கப் பணத்தைக் கரைத்தவர்களுக்குத்தானே அதன் கஷ்ட நஷ்டம் தெரியும்—இடையே இருந்தவர்களுக்கு என்ன! வாய் வலிக்க நம்மைத் திட்டினார்கள், அவ்வளவுதானே! இதில் என்ன கஷ்டம் அவர்களுக்கு! வழக்கமாகச் செய்துகொண்டு வருகிற காரியம்—அது தவிர வேறு எந்தக் காரியத்திலும் அவர்களுக்கு நாட்டமே செல்ல முடியாத அளவுக்கு, அந்த ஒரு காரியத்தில் ஈடு எதிர்ப்பற்ற திறமை பெற்றல்லவா" விளங்குகிறார்கள்!

காங்கிரஸ் கட்சி நாம் 15 இடங்களில் மட்டும்தானே வெற்றி பெற்றோம், என்று கேவலமாகக் கருதவுமில்லை; அலட்சியமாக இருந்து விடவுமில்லை; மாறாக ஆராய்ச்சி செய்து வருகிறார்கள்; தோல்வி ஏற்பட்ட காரணங்கள் குறித்து விளக்கம் கேட்கிறார்கள், தம்பி! காஞ்சிபுரம் தொகுதியில், காங்கிரஸ் தோற்றதன் காரணத்தைக் கண்டறிந்து, நிலைமையைச் சரிப்படுத்துவதற்காகவே அமைச்சர் ஒருவர் தமது அலாதியான அறிவாற்றலைச் செலவிட்டிருக்கிறார்!!

திராவிட முன்னேற்றக் கழகத்தை நாங்கள் குறைத்து மதிப்பிட்டு விட்டோம், அதனால்தான் எங்களுக்கு இவ்வளவு தொல்லையும் தோல்வியும் வந்தன, என்று கம்யூனிஸ்டு வட்டாரம் கருதுவதாகப் பத்திரிகைச் செய்தி ஒன்று பார்த்தேன்.

பிரஜா-சோஷியலிஸ்டு கட்சியின் தலைவரும் என் நண்பருமான சின்னதுரை, திராவிட முன்னேற்றக் கழகம் 'கூட்டாக' இருந்து தேர்தலில் ஒரு அணி ஏற்படுத்தாது போனதனால்தான், காங்கிரஸ் இத்தனை இடங்களைப் பிடித்துக்கொண்டது என்று கூறுகிறார்.

சோஷியலிஸ்டு வட்டாரத்திலும், இதுபோன்றே கருதப்படுவதாக அறிகிறேன்.

தேர்தல் களத்திலே ஈடுபட்ட ஒவ்வொரு கட்சியும், திராவிட முன்னேற்றக் கழகம் பெற்ற வெற்றி 15 இடங்களிலேதானே, என்று அலட்சியம் காட்டவில்லை; ஆராய்கிறார்கள்; மேற்கொண்டு எடுத்துக் கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்துப் பேசுகிறார்கள்; தைலம் தடவியவர்கள் மட்டும்தான், கேலி பேசுகிறார்கள், 15 இடங்கள்தானே என்கிறார்கள். புலியுடன் போரிட்டு, உடலெங்கும் புண்ணாகிக் கிடக்கும் வீரனை, பாராட்டுவர், கேலி பேசமாட்டார்கள். அஃதேபோல, இன்றளவு வரையில் 'இந்தியாவிலே' ஏகசக்ராதிபத்யம் செய்வதற்கான கட்சி என்று "புகழப்பட்டு வரும் காங்கிரசைத் துணிந்து எதிர்த்து நின்று, பதினைந்து இடங்களில் வெற்றி பெற்ற நமது கழகத்தைக் கேலி பேசுகின்றனர்—பேசுபவர்கள், எங்கள் ஆற்றலைக் காணீர்! நாங்கள் காங்கிரஸ் கட்சியை ஓட ஓட விரட்டி அடித்தோம், எல்லா இடங்களிலும் வெற்றிக் கொடி நாட்டினோம், என்று பட்டியல் காட்டுகிறார்களா, என்றால், அதுதான் இல்லை! போகட்டும், பாவம், நம்மைக் கேலி செய்வதன் மூலம், தமக்கோர் "தெம்பு" தேடிக்கொள்கிறார்கள்.

தம்பி! பதினைந்து இடங்களிலே மட்டுமே வெற்றி பெற்றோம்; இது நமக்கு ஏமாற்றத்தைத் தரத்தான் செய்கிறது; எனக்கோ பெரியதோர் ஏமாற்றத்தைத் தருகிறது. போட்டியிட்ட இடங்களிலெல்லாம் வெற்றி பெற்றுவிடுவோம் என்று நான் எண்ணி ஏமாற்றம் அடையவில்லை, நான் குறைந்தது 30 இடங்கள் மட்டிலுமாவது கிடைக்கும்என்று கணக்கிட்டிருந்தேன். பதினைந்துதான் கிடைத்தது. இது எனக்கு வேதனை தரத்தான் செய்கிறது. இந்த வேதனை எனக்கு எப்போது குறைகிறது என்றாலோ இதற்கும் வக்கற்றுப் போய், இரு கொடி ஏந்திகளாகி, அழையாமலே நுழைந்துகொண்டு, தேர்தல் முரசாகப் பயன்பட்டவர்

# ஆங்கில ஏடுகள் அறிந்ததைக்கூட.......

கள், பதினைந்துதானா! பதினைந்தே பதினைந்துதானா என்று பரிகாசம் பேசுகிறார்களே, அப்போதுதான் குறைகிறது! இப்படியும் சில விசித்திர சித்தர்கள் இருக்கிறார்களே என்பதைக் காணும்போது, எனக்கு வேதனை மறைகிறது, வேடிக்கையாக இருக்கிறது.

தம்பி! பத்து ஆண்டுகளாகத் தொடர்ந்து பதவியில் இருந்தும், பல பல கொடுமைகளை இழைத்தும் இந்த முறையும் நாட்டு மக்கள், காங்கிரசு கட்சியையே 'ஆளவந்தார்'களாக்கி விட்டனர். மான்செஸ்டர் கார்டியன் பத்திரிகை, இது குறித்து வியந்து பாராட்டி எழுதுகிறது. கார்டியன் வியப்புடன் இதனைப் பாராட்டுவதற்குக் காரணம், ஜனநாயகத்திலே பண்பட்ட பிரிட்டன் போன்ற நாடுகளிலே, மக்கள் விழிப்புணர்ச்சியுடன் இருக்கிறார்கள். ஆளும் கட்சி, அறிவீனத்தாலோ, அகந்தையாலோ, அலட்சியத்தினாலோ, மக்கள் நலனுக்கு ஊறு நேரிடும் காரியம் செய்துவிட்டால், மக்கள் சீறி எழுந்து ஆளும் பொறுப்பை மீண்டும் அந்தக் கட்சியிடம் தர மறுக்கிறார்கள். இங்கோ காங்கிரஸ் கட்சி ஆயிரத்தெட்டு தவறுகளைப் புரிந்தும், பொறுப்பு மிக்க தலைவர்களும், பொறுப்புள்ள பத்திரிகைகளும் அத்தவறுகளைக் காட்டி இடித்துரைத்தும், ஓட்டுகளை மட்டும் காங்கிரசு கட்சியினால் தட்டிப் பறிக்க முடிகிறது! இதுதான், மான்செஸ்டர் கார்டியன் பத்திரிகைக்கு வியப்பாக இருக்கிறது. இது ஒருபுறம் இருக்கட்டும்; நான் கூறவந்தது தம்பி! இப்படி மக்களிடம் ஓட்டுகளைத் தட்டிப் பறிக்கும் 'மகத்துவத்தை' இன்றும் குன்றாமல் பெற்றிருக்கும் ஒரு பலம் பொருந்திய கட்சியுடன் போட்டியிட்டு நாம் பதினைந்து இடங்களைப் பெற்றோம்; அதனை, காங்கிரஸ் கட்சியின் எதிர்ப்பு எனும் சூறாவளியில் சிக்கினால் புயலிற்பட்ட கலமாவோம் என்று அஞ்சி ஒதுங்கிக் கொண்டவர்களும்; அடிபணிந்து அக்காரவடிசல் பெற்றவர்களும், கேலியாகப் பேசிக்கொண்டு போகட்டும்; தங்கள் இயலாமையை இதன் மூலம் காட்டிக் கொள்கிறார்கள்.

காங்கிரஸ் கட்சிக்கு இன்றளவும் பத்திரிகை பலம், பிறர் கண்டு வியந்திடத்தக்க அளவு இருந்திடக் காண்கிறோம்.

முதலாளிகள், தங்கள் இலாப வேட்டைக்கு வாய்ப்பும் வசதியும் பெற, காங்கிரசை ஆதரிக்க வேண்டும் என்ற தத்துவத்தைப் பொன்னெனப் போற்றி வருகிறார்கள்.

டாட்டா போன்றாரின் பணப் பெட்டிகள், காங்கிரசின் ஓட்டுப் பெட்டிகளுக்குத் துணையாக நிற்கின்றன.

இவ்வளவு 'வல்லமை' படைத்த ஒரு கட்சியை, தோள் வலியும் வாள் வலிவும் படைத்த ஓர் தூர்த்தனை, தொலைவிலிருந்து 'கவண்கல்' வீசியே வீழ்த்த முற்பட்ட அஞ்சா நெஞ்சனைப்போல், வசதியற்ற நிலையையும் மறந்து, நாம் எதிர்த்து நின்றோம். எமது கோபப் பார்வை போதும் இவர்களைச் சுட்டுச் சாம்பலாக்க என்று கொக்கரித்தனர்; கலங்கினோமில்லை; தேர்தலில் ஈடுபடுவது ஜனநாயகக் கடமை, வெற்றி பெற்றே தீர வேண்டும் என்று ஒன்றும் இல்லை. கூடுமானவரையில், முடிந்த அளவு பலமான எதிர்ப்பினை உருவாக்கிக் காட்டப் போகிறோம் என்று கூறிவிட்டு களத்தில் இறங்கி, கடமையைச் செய்தோம். 15 இடங்களில் வெற்றி கிடைத்தது. மற்றவர்கள் கண்டு, புகழ்ந்திட, வியந்திட வேண்டிய சம்பவமே தவிர, கேலி பேசும் சம்பவமாகுமா இது!!

பதினைந்து இடங்கள்தான் பெற்றோம், ஆனால், மொத்தமாக நமக்குக் கிடைத்துள்ள ஓட்டுகள், சாமான்யமல்லவே! கட்சி என்ற முறையில், காங்கிரசுக்கு அடுத்தபடியாக சென்னை ராஜ்யத்தில் தி. மு. கழகமே 'ஓட்டுகள்' பெற்றிருக்கிறது என்பதை, வியந்தே பல இதழ்கள் எழுதியுள்ளன.

கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற பழமொழி போலல்லவா இது இருக்கிறது, இடங்கள் அதிகம் கிடைக்காவிட்டாலும் ஓட்டுகள் ஏராளம் கிடைத்தன என்று 'விண்ணாரம்' பேசுவது என்று, சிலர் கூறக்கூடும்.

ஒரு ஜனநாயக நாட்டிலே இடங்கள் ஒவ்வொரு கட்சிக்கும் எத்தனை எத்தனை கிடைத்தன என்பதை மட்டுமல்ல, ஓட்டுகளின் எண்ணிக்கையையும் கூர்ந்து பார்த்துத்தான், அரசியல் போக்கு, எப்படி உருவாகிறது என்பதைத் தெரிந்துகொள்வார்கள் — எதிலும் தெளிவு வேண்டும் என்ற கொள்கை கொண்டவர்கள், அந்த முறையிலே, தி. மு. கழகம், பெற்றிருக்கும் ஓட்டுகளின் எண்ணிக்கை, பலப்பல அரசியல் தலைவர்களை, மலைக்கச் செய்திருக்கிறது. அதனை மறைத்துச் சிலர் பேசுவர், உண்மையை நேருக்கு நேர் சந்திக்கக் கிலி கொள்பவர்கள், உள்ளதைக் காண மறுக்கிறார்கள்.

உலகமே, ஒரு ஒப்பற்ற சம்பவமாகக் கருதத்தக்க விதத்தில், கேரளத்தில் கம்யூனிஸ்டு கட்சி மகத்தான வெற்றி பெற்றிருக்கிறது—ஆளும் கட்சியாகிவிட்டது.

ஆச்சரியத்தால்மூர்ச்சையானவர்களும்அச்சத்தால் தாக்குண்டவர்களும், கலக்கத்தை மறைத்துக்கொண்டு கம்யூனிஸ்டுகள் இனிப் பெட்டிப் பாம்புதான் என்றும், சட்டசபை அவர்களுக்குச் சிறைக் கூடமாகிவிடும் என்றும் அதைச் செய்வோம் இதைச் செய்வோம் என்று கொட்டி அளந்து வந்தார்களே, கொடி தூக்கிக் கொண்டு இதோ இனி என்ன சாதிக்கப் போகிறார்கள் பார்த்து விடுவோமே இவர்களின் ஆற்றலை என்றும், பலவிதத்தில் பேசி, தோல்வியால் ஏற்பட்ட துயரத்தை மறைத்துக்கொள்ள முற்பட்டிருக்கின்றனர், மூக்கறுபட்டவர்கள்—ஆனால், உலகவரலாற்றிலேயே, நேரு பண்டிதரின் புகழ் உலகில் எங்கும் பரவி இருக்கும் நேரத்தில், பாரில் எமது நேருவுக்கு நிகர் யாரே! என்று பாவாணர்கள் பாடிடத்தக்க நிலை இருக்கும்போது, அவருடைய பெரும் புகழொளி கண்டும் மயங்கமாட்டோம், காங்கிரசுக்கு அடிபணிய மறுக்கிறோம் என்று துணிந்து கூறி, கம்யூனிஸ்டு ஆட்சிக்குக் கேரளம் அழைப்பு விடுத்துள்ள சம்பவம், அகில உலகும் அச்சமோ ஆயாசமோ, உணர்ச்சியின் வகை எப்படிப்பட்டதாக இருப்பினும் கூர்ந்து கவனிக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். வரலாற்றிலே பொறிக்கப்படத்தக்க சம்பவமாகும்.

பளிச்சிட்டுத் தெரியும் இந்தச் சம்பவத்துக்கே, 'இந்து' இதழ் புள்ளி விவரத்தின் துணையைத் தேடி, இடம் அதிகம் கிடைத்திருக்கிறது, என்றாலும் கம்யூனிஸ்டுக் கட்சிக்குக் கிடைத்துள்ள ஓட்டுகள், காங்கிரஸ் கட்சிக்குக் கிடைத்ததைவிடக் குறைவுதான்! என்று வாதாடுகிறது. கம்யூனிஸ்டு கட்சிக்கு 19,89.369 —காங்கிரசுக்கு 21,62,000 ஓட்டுகள்.

# முறையறியோம்; முயற்சி அறிவோமே!

கேரளத்துச் சம்பவத்துக்குப் பயன்படும், வாதம், தி. மு. கழகத்துக்குக் கிடைத்த இடங்கள் பதினைந்து தான் என்றாலும், கிடைத்த ஓட்டுகள் ஏராளம் என்று கூறும்போது மட்டும், சொத்தை வாதம், மீசையில் மண் ஒட்டவில்லை என்பதுபோன்ற பேச்சு, என்று எப்படி ஆகிவிடும்.

தம்பி! உன் அரிய உழைப்பும் பிறர்கண்டு பாராட்டத்தக்க ஆற்றலும், வீண்போகவில்லை; நாட்டு மக்களை நித்த நித்தம சந்தித்து உரையாடி நமது கொள்கைகளை எடுத்துக்கூறியது பலன் அளிக்காது போய்விடவில்லை; இந்தத் தேர்தலில் மொத்தத்தில் நமக்கு 16 இலட்சத்துக்கு மேல் ஓட்டுகள் கிடைத்துள்ளன; ஏ! அப்பா! எத்தனை விதமான எதிர்ப்புகளுக்குப் பிறகு தாக்குதல்கள் எவ்வளவு கீழ்த்தரமானவை, எவ்வளவு ஈனத்தனமான செயல்களால் நம்மை அழிக்க முனைந்தனர், எவ்வளவு மிருகத்தனமான முறைகளைக் கையாண்டனர். தப்பித் தவறி காட்டு வழி சென்று விட்டவனைத் தாக்க மிருகங்கள் எப்படிக் கிளம்புமோ, அப்படி அல்லவா, நமது கழகத்தின்மீது பலரும் பாய்ந்தனர்; என்னென்ன பழிச்சொற்கள், எவ்வளவு வதந்திகள்! இவ்வளவுக்கும் நாம் கலங்காதிருந்தோம் என்பதல்ல ஆச்சரியம். இவ்வளவு பேச்சுக்களையும் துச்சமானவை, குப்பை கூளம், நொந்துபோன உள்ளத்திலிருந்து கிளம்பும் நாராசம் என்று கருதி, மதிப்பளிக்க மறுத்து, நாட்டு மக்களில் 16-இலட்சம் பேர், நமது கழகத்துக்கு ஓட் அளித்தனரே. அது அல்லவா ஆச்சரியம். மான்செஸ்டர் கார்டியனுக்கு இது தெரியாது; இப்போது தெரிவித்தாலும் புரியாது. ஆனால் இவ்வளவு எதிர்ப்பு நெருப்பை நீந்தி, நம்மில் பதினைந்து பேர், வெற்றியை அடைந்தோமே, அது நேர்மை உள்ளம் உள்ள மதிப்பினை, நிச்சயமாக அதிகப்படுத்தி இருக்கிறது என்பதிலே ஐயமில்லை.

நமக்கு எவ்வளவு எதிர்ப்புக்குப் பிறகு இத்தனை ஓட்டுகள் கிடைத்தன என்பது மட்டுமல்ல, நான் உன்னைக் கவனிக்கச் சொல்வது, நாம் எவ்வளவு தவறுகள் செய்திருக்கிறோம், அவ்வளவுக்கும் பிறகு நமக்கு இந்த அளவு ஆதரவு திரண்டதே அதனைக் கவனிக்கச் சொல்லுகிறேன்.

என்னைப் பொறுத்த வரையிலும் சரி என்னுடன் மிக அதிகமாக நெருங்கிப் பழகிடும் என் தம்பிமார்கள் பலரைப் பொறுத்த வரையிலும்கூட, கடந்த பத்து பதினைந்து ஆண்டுகளாகவே தேர்தலில் ஈடுபடுவது என்றாலே, ஒருவிதமான 'கசப்பு' இருந்து வந்தது. ஓட்டுகேட்பது என்பதையே ஏதோ செய்யத்தகாத, செய்யத்தேவையற்ற ஒரு காரியம் என்று கருதி வந்திருக்கிறோம். இந்த நாட்டு மக்கள் யார் எதைச் சொன்னாலும், இனிக்க இனிக்கச் சொன்னால் எதனையும் நம்பி விடுகிறார்கள், நாம் கூறும் உண்மைகளோ மக்களுக்குக் கசப்பாகவும் கிலி மூட்டுவதாகவும் இருக்கின்றன, அதனாலேயே, நம்மை அவர்கள் வெறுக்கிறார்கள், இந்த நிலையில் அவர்கள் நமக்கு ஓட்டுத் தருவார்களா என்ன! செச்சே! நமக்கேன் பல்லிளிக்கும் வேலை! பொறி பறக்கப் பேசுவோம்! அச்சம் தயை தாட்சணியத்துக்கு இடம் வைக்காமல் பேசுவோம்! கேட்டால் கேட்கட்டும் கேட்காவிட்டால் நாசமாய்ப் போகட்டும்! ஊதுகிற சங்கினை ஊதுவோம். பொழுது விடிகிறபோது விடியட்டும்! என்று இவ்விதமாகவெல்லாம் நினைத்துக்கொண்டு இயக்கப் பணியாற்றிக்கொண்டு வந்திருக்கிறோம். அப்படிப்பட்ட நாம் தேர்தலில் ஈடுபட்டபோது. அதிலே மிகுதியான சுவையும், அந்தச் சுவை மட்டுமே தரக்கூடிய சுறுசுறுப்பும், எங்ஙனம் பெற முடியும்.

உன்னிடம் கூறிக்கொள்வதிலே தவறு என்ன தம்பி! நான் காஞ்சிபுரம் தொகுதியில், நல்ல முறையில் தான் பணியாற்றினேன். ஆனால், பொதுக்கூட்டத்திலேயும் சரி, தனித்தனியாக மக்களிடம் அணுகிய போதும் சரி 'ஓட்டு' தரச்சொல்லி, கேட்கமுடியவே இல்லை; விருப்பமில்லாததால் அல்ல முறை தெரியாததால்! உடன் வந்தவர்கள் தான் பேசுவர், நான், நாக்கு கட்டுண்ட நிலையில் நிற்பேன்; மெத்தச் சிரமப்பட்டு, நான் சொல்லக் கூடியதெல்லாம்,

பார்த்துச் செய்யுங்கள்
கூட இருங்கள்
வரட்டுமா!
என்ன? செய்கிறீர்களா!

என்ற இவைகளேதான்! மேலால் பேசமுடியவில்லை—தெரியவில்லை. அது போன்றே, நான் பேசிய பொதுக்கூட்டங்கள் ஏராளம்—இரண்டே இரண்டு கூட்டங்களிலேதான், எனக்கு 'ஓட்டு' போடுங்கள் என்று கேட்க முடிந்தது—உதய சூரியன் பெட்டியில் ஓட்டு போடுங்கள் என்று கேட்டேன். உடனிருந்த நண்பர் கூட, அப்பா! பரவாயில்லையே! அண்ணா ஓட்டுபோடச் சொல்லிக்கேட்டுவிட்டாரே! என்று வேடிக்கையாக வியந்துரைத்தார்!

என் நிலைதானே, நமது அபேட்சகர்களிலே பலருக்கும் இருந்திருக்கும். பல ஆண்டுக் காலமாக

பொறிபறக்கப் பேசுவது
கண்டதுண்டமாக்கிக் காட்டுவது
எதிர்ப்பு வாதங்களை முறியடிப்பது
விளக்கம் தருவது
வீரமுழக்கம் புரிவது
வரலாற்றுச் சம்பவம் தருவது

போன்ற முறைகளிலேயே பழகிப்போயிருக்கிறோம். அப்படிப்பட்ட நாம் மக்களிடம் கனிவாகப் பேசி, அவர்கள் அலட்சியம் காட்டினால் தாங்கிக்கொண்டு, புரியாதவர்களாக இருந்தால் பொறுமையை இழக்காமல், ஓட்டு கேட்கும் முறையை, எப்படி எளிதாகக் கற்றுக்கொள்ள முடியும். கேள், தம்பி! என் கதையை!! தங்கவேலர், என்னை 'ஓட்டு' கேட்பதற்காக, முதல் நாள் கோவிந்தவாடி என்ற கிராமத்துக்கு அழைத்துக்கொண்டு சென்றார்—அழைத்துக்கொண்டு சென்றார் என்று கூறுவதைவிட, இழுத்துக்கொண்டு சென்றார் என்பதுதான் பொருத்தமாக இருக்கும்.

நாலைந்து கிராமத்துப்பெரியவர்களைச் சந்தித்தோம்—சந்தித்தோம் என்று கூறுவதைவிட, எங்களைப் பார்க்கும்படி சிரமப்பட்டு அவர்கள் எதிரில் சென்று நின்றோம்.

தங்கவேலர், துவக்கினார், "இதோ — நம்ம

# படமும் தெரியும் - பாடமும் புரியும்!

அடுத்த இதழில்

அறிஞர் அண்ணா

அவர்களின்

## படமும் பாடமும் (3)

என்ற தம்பிக்கு மடல் இடம்பெறும்.

அண்ணாதுரை—நம்ம தொகுதிக்கு நிற்கிறார்—சட்ட சபைக்கு—நல்லவர்—படிப்பாளி—தமிழ் நாட்டில் ஒரு தலைவர்—'' என்று விவரித்தார்.

கேட்டுக்கொண்டிருந்தவர்கள் முகத்திலே ஒரு விதமான மலர்ச்சியும் இல்லை; எனக்குச் சிறிதளவு வெட்கமாகக் கூட இருந்தது.

சில நிமிடங்கள் தங்கவேர் பேசிவிட்டு, பிறகு, கிராமத்துப் பெரியவர்களின் பதிலை எதிர்பார்த்தார்! தம்பி! பதில் வெளிவந்தது. நான் பயந்துபோனேன், கோபம் கூடத்தான்!!

''அது சரிங்க! எலக்ஷனுக்கு வருகிற ஒவ்வொருத்தரையும்தான் இந்திரன் என்று சொல்றிங்க, சந்திரன் என்று சொல்றிங்க நாங்க என்னத்தைக் கண்டோம் ''

இது அவர்கள் அளித்த பதில்! ஓட்டு கேட்கச் சென்ற எனக்கு எப்படி இருந்திருக்கும் என்று எண்ணிப் பாரேன் தம்பி!

கோவிந்தவாடி, காஞ்சீபுரத்துக்கு வெகு அருகாமையில் உள்ள சிற்றூர்—ஐந்தாறு மைல்களுக்குத்தான் தொலைவு. அங்கு, இவ்விதம், ''வரவேற்பு!''. எப்படி இருந்திருக்கும், என் எண்ணம் என்பதை நினைத்துப் பாரேன்!

ஓட்டு கேட்டுக் கேட்டுப் பழக்கமாகி இருந்தால், இவ்வளவு அக்கறையற்றும், அலட்சியமாகவும் பேசியவர்களிடம், மளமள வென்று பதில் பேசிடத் தெரிந்திருக்கும். நமது கழகம் தான் தேர்தல் அலுவலில் இதுநாள் வரை ஈடுபடவில்லையே. எனவே பதில் ஏதும் கூறத் தோன்றவில்லை!

தம்பி! இதே கோவிந்தவாடி, எனக்கு 'ஓட்' அளிக்காமல் இருந்து விடவில்லை; நிறைய அளித்தார்கள்; ஆதரவு கிடைத்தது.

தேர்தல் காரியத்திலே ஈடுபாடுகொண்டு, நாம் சுவையும் சுறுசுறுப்பும் வழியும் வகையும் பெறவில்லை.

பொதுவாகவே ஒரு தேர்தலுக்குத் தேவையான அளவு வசதி இல்லை! அத்துடன் இந்தக் குறை வேறு! இந்த நிலையில் நமக்குப் பதினாறு இலட்சத்துக்குமேல் 'ஓட்டு'கள் கிடைத்தன என்பதிலேதான், வியப்பு இருக்கிறது!

நாமக்கல் அடுத்த சிற்றூர் ஒன்றிலே, மாலை சுமார் ஐந்து மணிக்கு, நான், பேசிக்கொண்டிருக்கிறேன்' 'ஏழாம் தேதி! திடீரென்று, நண்பர் சித்தய்யன், என் கரத்திலிருந்த 'மைக்'கை வெடுக்கெனப் பறித்துக் கொண்டு,

ஒரு சந்தோஷமான செய்தி
ஒரு மகிழ்ச்சியான செய்தி
நம்ம அண்ணா எம். எல். ஏ. ஆகிவிட்டார்
எலக்ஷனில் ஜெயித்துவிட்டார்

என்று சிரிப்பும் பேச்சும் குழையக் குழையக் கூறினார்.

தம்பி! கோவிந்தவாடி கிராமத்திலே, நான் கண்ட முதற் காட்சியையும், நாமக்கல் அருகே உள்ளே சிற்றூரில் சித்தய்யன் என்னிடமிருந்த 'மைக்'கைப் பறித்துக்கொண்டு பேசிய காட்சியையும், மனக்கண்ணாலே பார், படமும் தெரியும் பாடமும் கிடைக்கும்.

கோவிந்தவாடி கிராமத்திலே, முதலிலே. எனக்கு ஏற்பட்ட திகைப்பு, வெட்கம், கோபம், சலிப்பு. இவைகளை, என்னுடன் பணியாற்றியவர்கள் மக்களைச் சந்திப்பதிலும் உரையாடி விளக்கமளிப்பதிலும் தனித் திறமையும் தளராத ஊக்கமும் காட்டி விரட்டி அடித்து வெற்றி தேடித் தந்தனர்.

தம்பி! நான் இந்தச் சம்பவத்தைக் கூறுவதற்குக் காரணம், நாம் தேர்தலில் ஈடுபட்டோமே தவிர, அதற்கான பக்குவத்தை பயிற்சியைப் போதுமான அளவு பெறுவதற்கு நமக்குக் காலம் போதுமான அளவு கிடைக்கவில்லை.

இந்தக் குறைமட்டுந்தானா! நாம்—நான் உட்படத் தான்—பல தவறுகளை விவரமறியாத காரணத்தால் புரிந்திருக்கிறோம்.

> தொகுதிகளின் தன்மையை ஆராய்ந்து அறிதல்
>
> எவரெவர் எந்தெந்தத் தொகுதியில் ஈடுபடும் நல்வாய்ப்பு உளது என்பதைத் தெரிந்து கொள்ளுதல்

போன்ற 'அரிச்சுவடி'யே நாம் சரியான முறையில் பெற்றிருந்தோமில்லை.

நமது மாநாடு கூட்டுவதற்கு நாம். 'திடல்' தேடிப் பெறுவதற்கு எடுத்துக்கொள்ளும் முயற்சியைவிட, அதிலே காட்டும் திறமையைவிட, குறைவாகவே, தேர்தல் தொகுதிகளை ஆராய்வதிலும், யார் எந்தத் தொகுதிக்கு என்பதுபற்றி தீர்மானிப்பதிலும், காட்டியிருக்கிறோம்.

இவ்வளவு 'குறைபாடு'கள் இருந்தும், நாம் பதினாறு இலட்சம் வாக்குகளைப் பெற்றோம்!! வானம் பார்த்தபூமி என்ற நிலையிலேயே விளைச்சல் குறிப்பிடத் தக்க அளவு என்றால், நல்ல பாசனவசதியும் கிடைத்து விட்டால் விளைச்சல், தரமாகத்தானே இருக்கும்! அந்த முறையிலே எவ்வளவோ

திறமைக் குறைவு
தெளிவுக் குறைவு
வசதிக் குறைவு
அனுபவக் குறைவு

# பத்தொன்பது இலட்சம்தான் பாரீர்!

இருந்தும் பதினறு இலட்சம் 'ஓட்'டுகளுக்குமேல் பெற்றிருக்கிறேம் என்ருல், முறையும் சரிவர அறிந்து, வசதிகளையும் தேடிப் பெற்று, தேர்தலில் ஈடுபட்டால், இந்த பதினைந்துகண்டே பதறிப்போகிருர்களே சிலர், அவர்கள் மயங்கிக் கீழே சாய்ந்திடும் அளவுக்கல்லவா, வெற்றியின் எண்ணிக்கை உயரும்!!

வசதிகளைத் தேடிக்கொள்வதற்காகக் கூடிக் கூடிப் பேசினேம்—திட்டம் பல தீட்டினேம்—நானும் வீரதீரமாக வாக்களித்தேன் ஐந்து இலட்சம் திரட்ட வழிகண்டுபிடித்து விட்டேன் என்று! ஆனல், அந்தத் திட்டத்தின்படி காரியத்தைத் துவக்கவே இல்லை.

புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி, இலட்சிய நடிகர் ராஜேந்திரன், நடிகமணி டி. வி. நாராயணசாமி, இவர்கள் இந்தத் தேர்தல் செலவுகென்றே ஒரு நல்ல நிதி திரட்டி உதவவேண்டும் என்பதற்காக, ஒரு படத்தில் ஊதியமே பெருமல் நடித்துத் தருவதாக முன் வந்தனர். நான் தான் அவர்கள் தர இருந்த அரிய வாய்ப்பினைப் பயன் படுத்தி, சில லட்சரூபாய்கள் கிடைப்பதற்கான வாய்ப் பைப்பெறத் தவறிவிட்டேன்.

அந்தத் தவறு, என்ன தொல்லையைத் தந்தது என்கிருய்!

தேர்தல் நேரத்தில் தாங்க முடியாத பணமுடை!!

நூறு இடங்களுக்கு மேல் போட்டியிடுகிறேம்.

பணபலம் இல்லை—அதனை ஓரளவுக்கேனும் பெறத் தக்க வாய்ப்பு கண்ணுக்குத் தெரிந்தும் பயன்படுத்திருக் கொள்ளத் தவறிவிட்டோம்.

பாய்மரமும் இல்லை—சுழற் காற்றும் அடிகிறது—கலம் என்ன கதி? என்று கேட்கும் நிலை அல்லவா இது.

இந்த நிலையிலே, இடம் 15 தான் என்ருலும், கிடைத்த ஓட்டுகள் 16-இலட்சத்துக்கு மேல் என்ருல், தம்பி! அது உன் அறிவாற்றலின் விளைவு என்பதன்றி வேறென்ன? நாட்டு மக்களுக்கு, நாம் எடுத்துக்கூறி வருவது, புரிந்துவிட்டது என்பதுதானே இதன் பொருள்!

பெருமைக்கும் பூரிப்புக்கும் உரிய நிலைதான் இது—கேலி பேசுவோரும், உள்ளூர இதனை அறிவர்.

ஐயம் சிறிதேனும் உள்ளவர்களை, வேண்டுமானல் வெற்றிபெற்ற காங்கிரஸ்காரர் படும் வேதனையையும் பார்க்கச் சொல்லு, தோற்ருலும், முக மலர்ச்சியுடன் இருக்கும் நமது கழகத் தோழரையும் பார்த்திடச் சொல்.

தம்பி! கேரளத்தில் கம்யூனிஸ்டு அமைச்சரவை ஏற்பட்டிருக்கிறது. முற்போக்கு எண்ணம் கொண்டவர் அனைவரும் வாழ்த்தி வரவேற்க வேண்டிய மகத்தான நிகழ்ச்சி இது. வெற்றிபெற்று அமைச்சரவை அமைத்த கம்யூனிஸ்டுகளை வாழ்த்துவோம், தம்பி, உளமார. அமைச்சர் அவைதான் கம்யூனிட்டுகள் அமைத்தனரே தவிர, ஆட்சி எம்மிடம்தான என்று டில்லியில் காங்கிரஸ் தலைவர்கள் எக்காளமிடுகின்றனர்! வெட்கத்தையும் துக்கத்தையும் மறைத்துக்கொள்ள, இது அவர்களுக்கு உதவுகிறது.

சங்கரன் நம்பூதிரிபட் என்ற கம்யூனிஸ்டு தலைவர், அமைச்சர் அவை அமைத்திருக்கிருர்.

கேரளத்துக் கவர்னர் மாளிகையிலே மூவர்ணக் கொடி பறக்கிறது! செங்கொடியைச் சிறப்புடன் பறக்க விட்டிருக்கும் கம்யூனிஸ்டு கட்சி, அமைச்சர் அவை அமைத்திருக்கிறது.

தம்பி! கேரளத்துக் காட்சியை மனக்கண்ணுலே காண்கிருய் அல்லவா!

கேரளத்தில், கம்யூனிஸ்டு கட்சி பெற்றுள்ள ஓட்டுகள், 19,86,369! அமைச்சர் அவை அமைத்து அவனி எங்கும் கவனித்துப் பார்த்திடத்தக்க நிலையைப் பெற்றுவிட்டனர்.

தம்பி! பதினைந்தே இடங்களைத்தானே பெற்ருர்கள் என்று நம்மைக் கேலி செய்கிருர்களல்லவா இந்தக் கேலியைத் தாங்கிக்கொள்ளும் நாம் பதினறு இலட்சம் ஓட்டுகளுக்கு மேல் பெற்றிருக்கிறேம்.

பத்தொன்பது இலட்சத்துக்கு ஒரு மந்திரிசபை அமைகிறது—கேரளத்தில்.

பதினறு இலட்சம் நமக்கு—இடமோ பதினைந்து தான்!

என்னதான், ஏளனம் பேசட்டும், தம்பி! 19இலட்சம் ஓட்டுகள் கேரளத்தில் அமைச்சர் அவை ஏற்பட உதவிற்று! என்ற உண்மையை அறிந்த பிறகு, நாம் 16 இலட்சத்தை அலட்சியமாக கேவலமாகப் பேசத் தோன்ருது, அரசியலில் பொறுப்பும், நேர்மையும் வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களுக்கு, மற்றவர்பற்றி நமக்கென்ன கவலை.

அண்ணன்,

அண்ணாதுரை

(7—4—57 திராவிட நாடு இதழில்)


அறிஞர் பெருந்தகை

அண்ணா

அவர்களின்

60-ம் ஆண்டு

நிறைவு விழாவில்

28-9-69 ஞாயிறு மாலை

"கவிஞர் நெஞ்சில் அறிஞர் அண்ணா"

என்னும் கவிதை மலர்

அமைச்சர் மாண்புமிகு

மா. முத்துசாமி

அவர்கள் தலைமையில்

காஞ்சித் தலைவர் பிறந்து வளர்ந்த காஞ்சிமாநகரில் வெளியிடப்படும்.

விலை ரூ. 2

முன்பணம் அனுப்பக்கூடிய முகவர்கள் முன்னதாகவே விண்ணப்பிக்கவும்.

பதிப்பாசிரியர்: புலவர் ஸ்ரீ. அன்பரசன், 'கல்வி வெளியீடு' 48, ஆதம் சாயபு தெரு, சென்னை-13

# முற்று நினைவு, முடியாக் கவிதை!

தமிழர் கூட்டம் தன்னிலை தாழ்ந்து
இமிழ்கடல் உலகில் இளைத்தவ ராகிப்
பான்மை கெட்டுப் பலநாள் துயில
மேன்மை செய்ய மேதினியில் அவர்
நீடுதுயில் நீ நீக்கிட வந்தாய்
கூடும் பிரிந்தே கோயில் கொண்டாய்!
பாதை ஒன்றுள் பார்வையில் விரிந்து
பாதம் பட்டே பணிகள் மலர்ந்து
தொட்ட பணிகள் துலங்கிடு நேரம்
விட்ட குறையாய் வினையின் விளைவாய்
காலம் ஏற்றிய கைவிளக் குன்னைக்
காலன் வீணாய்க் கவிழ்த்தே விட்டான்!
கால மக்கள்தன் நடையும் சோரக்
காரிருள் எங்கும் கனமாய் படர
விதியின் நடையும் விரைவாய்த் தொடர
மதிபட் டழிந்த மணியென ஆனாய்!
இத்தரை மீதில் இம்மண் உயர்ந்து
நித்திரை நீங்கி நிறைவை எய்தி
நித்திய உழைப்பில் நிம்மதி காணும்
முத்திரை உலகாய் மலரச் செய்யும்
'ஆசைக் கனல்கள்' அமுத்திய தாலோ
ஓசை அடங்கி ஓய்ந்ததுன் நெஞ்சம்?
'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்'
என்றே சொன்னீர், எழுச்சி கொண்டோம்;
இதனைச் சோதித் தறிதற் கென்றால்
இதுவா சோதனை; ஐயோ வேதனை!
உதயக் கதிரால் ஒளியது கூட்டி
ஊக்கம் தந்தே உயர்த்திய செம்மல்
நீங்கள் அருகில் நிற்கும் பலத்தில்
நீள்கடல், மலையும், நெடுவான், பகையும்
எதையும் தாங்கும் இதயம்; ஆனால்
இதனைத் தாங்க இயல்வதோ நெஞ்சம்?
ஏட்டின் இருட்டில் இருந்த இலக்கியப்
பாட்டின் அடிகள் படையல் ஆக்கி
நாட்டில் மக்கள் நடுவில் வைத்தே
பூட்டைத் திறந்த புரட்சிச் சாவிநீ!
மானிட வித்தை மண்ணில் இறைவன்
வீணில் விரைவாய் போட்டே விட்டான்;
சத்தியம் என்றும் ஜனித்திடும், மீண்டும்
இத்தரை மீதினில், இனியும் உயர்த்திடும்!
ஒருதரு உயிரில் கட்டா யம்நீ
உருக்கொள வேண்டும், வரமும் இதுவே!
இத்தரை என்றும் உன்னைப்
புத்திர னாகப் பெற்றிடும் தாயாம்!

—மலர் மகன்

# அறிவின் மேதை

தீச்சாடும் பேச்சென்பார் சுடுதல் இல்லை
சிங்கமெனும் குரலென்பார் சீற்றம் இல்லை.
பூச்சாடும் தென்றலெனபார் பிறப்போ காஞ்சி!
பூதலத்தின் மன்னனென்பார் முடியும் இல்லை.
பேச்சாடும் போதுமக்கள் அண்ணன் என்பார்
பிரியென்று சொத்தினிலே பங்கு கேளார்
மூச்சாடும் வரைத்தொண்டை முயன்று ஆற்ற
முத்தமிழர் நாடென்றே முழங்கச் செய்தார்.

காசாடும் பதவியது என்ற போதும்
கடுகளவும் பேராசை இருந்த தில்லை.
ஈசாடும் பண்டமெனும் அரசு வாழ்வில்
இருந்தவரில் அண்ணாபோல் எவரும் உண்டோ?
தேசாடும் முகங்கண்ட பகைவர் கூட்டம்
தெய்வத்தைக் கண்டதுபோல் வணங்கும்
உண்மை!
மாசாடும் அரசியலில் மாற்றம் கண்டே
மாண்புமிகு படைத்தவராம் அறிஞர் அண்ணா!

சூரியனாய் தமிழ்நாட்டில் இன்பம் போக்கி
தூயதமிழ் ஆட்சியினை நிறுவிக் காட்டி
ஆரியமாம் மாயையது திரையை நீக்கி
ஆனபுகழ் அத்தனையும் நமக்கே என்றார்.
சீரியநல் பெரியாரின் துணையைக் கொண்டு
தெள்ளுதமிழ் வள்ளுவனாய் காட்சி தந்தார்.
ஏறியசிம் மாசனத்தில் இருந்த போதும்
ஏழையரின் துணைவரென்றே உலகம் ஓதும்.

மாறுகொண்டார் தோட்டத்தில் மலரும் இன்ப
மல்லிகைப்பூ என்றாலும் மணமுண் டென்றார்.
நேருகண்டார் சமதர்மம் என்று சொன்னால்
நிலைபெறவே அண்ணாதான் செய்தார் உண்மை!
வீறுகொண்டாள் தமிழன்னை வெற்றி கண்டாள்.
வேந்தரண்ணா மீட்டளித்த வாழ்வைக் கண்டே!
ஆறுகண்டார்; அரசியலில் பண்பைக் காக்க
அன்னைதமிழ் மூத்தமகன்! அறிவின் மேதை!

—புலவர் க. கோபண்ணன்.

# கவிஞர் தம்பதியர்

பகைவெல்லும் கண்ணுக்கு 'இமைமூடி' ஏன்?—பெருமை
பழிபாவம் காணாமல் திரைபோடத் தானா!
நகைவீசும் முத்துக்கு 'இதழ்மூடி' ஏன்?—கன்று
நகையாடும் வீணர்க்குத் தடைபோடத் தான்!

கனியாடும் வதனத்தில் 'கைமூடி' ஏன்?—பெண்மை
கையாளும் பண்பான எழில்நாணத் தால்!
மணியாடும் கண்டத்தில் 'துணிமூடி' ஏன்?—உடன்
மறைந்தாடும் தாலிக்கு மறைவாகத் தான்!

எனைநாடும் நினைவுக்குத் 'தடைமூடி' ஏன்?—நீங்கள்
இல்லாத பொழுதுக்கு எனைத்தேற்றத் தான்!
துணைதேடும் உணாவுக்கு இடைமூடல்ஏன்?—நம்
தொலைநேரப் பயணத்தில் இளைப்பாறத் தான்!

வளையாடும் கரங்கொண்டு எனைமூடல் ஏன்?—உளம்
வளைந்தாடும் நிலைமைக்கு முடிவாகத் தான்!
விளையாடும் செயலுக்கு முடிவொன்று ஏன்?—அது
வெறியாக நிலைமாற விரும்பாமை தான்!

—'மீனாமணி'

# வாழப் பிறந்தவர்கள்!

—அமரர் அண்ணா

> வாழப் பிறந்தவர்கள் நாம்;
> வாழத் துடிப்பவர்கள் நாம்;
> நாம் வாழ்கின்றோமா?
> நம்மால் வாழ முடிகிறதா?
> 1949ல் ஆராய்கிறார் அறிஞர் அண்ணா.

மூக்களாய்ப் பிறந்தார் அனைவருமே வாழத்தான் பிறக்கிறார்கள்; ஆனால் எல்லோருமே 'வாழ்ந்து' விடுவது இல்லை! உடலுழைத்து உருக்குலையும் விவசாயி, காலையெழுந்து மாலை திரும்பும் தொழிலாளி. கஷ்டப்பட்டும் 'கால் வயிறு' நிரம்ப வழியின்றி 'கடனாளி' ஆகித்திகைக்கும் மக்கள், இவர்கள் யாவருமே வாழப் பிறந்தவர்கள்தான்; ஆனால் அவர்கள் வாழவோ வழியில்லை! இந்த வேதனை உலக முரசின் எதிரொலி எங்கும் நிலவும் இதய கீதம்!

பரந்த உலகம், அதில் பிறந்த உயிர்கள், தங்களைக் காப்பாற்றிக் கொள்ளக்கூட வகையற்று, வாடி, தெருவோரங்களில் 'பிணங்களாக' தீண்டுவாரற்றுக் கிடப்பது ஒரு பக்கம். இரத்தத்தை வியர்வையாக்கி, இடுப்பொடிய வேலை செய்தும், தன் வயிறு நிரம்ப வழியில்லாது வாடும் மக்கள் கூட்டம் குழந்தை 'அம்மா, பால்' என்றலற தாய் காய்ந்து ஒட்டிப்போன மார்பிலிருந்து பால் கிடைக்காததால் அழும் குழந்தையைக்கண்டு 'ஐயோ, மகனே' என்று அலறுவது ஒரு பக்கம்.

பட்டு, பட்டாடை, படாடோபம், உல்லாசம், ஓரிடத்தில்! ஏழ்மை, கந்தல், 'கதியில்லையே' என்ற கலக்கம் ஒரு பக்கம்!

* * *

"இன்று என்னடி உங்காத்தில்? நான், பாதாம் அல்வாதான் செய்தேன்."

"இந்தச் சேலை தேவலாமா! நேத்துத்தான் எடுத்துண்டு வந்தார். நல்ல பட்டாம் விலை இருநூறும்."

"கமலி! இந்தக் கம்மலைப் பார்த்தாயோ 'சுராஜ்மல்ஸ்ல்' வாங்கினேன், ஒன்றரைக் காரட். விலை 1500 தாண்டி!"

'வனிதா! வாத்தியார் வந்துடுவார்! போ! மூஞ்சலம்பிண்டு வந்து உட்கார், வீணையை எடு!"

* * *

"அம்மா! அப்பா எங்கேம்மா காணோம்?"

"வருவாருடா, கண்ணு! ஆண்டை வீட்டுக்கு போயிருக்காரு. இன்னைக்கி 'கூலி முறை' இல்லே!" "அம்மா, அந்தத் தெரு சுப்பு ஏதோ தின்னுனம்மா...... மைசூர் பாகாம்! நீ, ஏம்மா எனக்கு அது போலத் தரமாட்டேங்கிறே!"

"ஏங்க! எத்தனை மாதமாச் சொல்றேன். போன பொங்கலுக்கு வாங்கின சேலை இது. பாருங்க ஊசி நுழைய இடமிருக்கா? ஏழு, எட்டிலே ஏதாவதொன்று வாங்கித்தர மாட்டீங்களா!"

"என்னடீ செய்வேன்...!

* * *

ஓரிடத்தில் டிபனுக்கு அல்வா! சேலை விலை இருநூறு, வைரக் கம்மல்! வீணைப் பாட்டு!

இன்னொரிடத்தில் கஞ்சிகாணாத கந்தன், கந்தலில்லாத காத்தாயி, 'என்னடீ செய்வேன்' என்ற ஏக்கம்!

இரண்டு இடங்களில் உள்ளோரும் வாழப் பிறந்தவர்கள்தான்! ஆனால் வாழ்வு? ஓரிடத்தில் வசந்தம்; இன்னொரிடத்தில் புயல்! வஞ்சகமின்றி உழைக்கிறான். அவனால் வாழ முடிவதில்லை. 'வாழ்வு' என்றால் என்ன என்று நினைக்கக்கூட முடிவதில்லை!

இன்னொரிடத்தில் உழைக்காத உல்லாசிகள், என்றாலும் வாழ்கிறார்கள், இன்பமாக, குதூகலமாக! இந்த இரண்டு இடங்களிலும் இருப்பவர்கள் மக்கள் — வாழப் பிறந்தவர்கள்தான்! ஆனால் 'வாழ்வு' ஓரிடத்தில் மலர்கிறது,



இன்னொரிடத்தில் அது வேதனையாக விரிகிறது!

இது, இன்றைய சமுதாயத்தில் நீடிக்கும் நிலை. மக்கள் யாவரும் சரிநிகர் சமானமாக வாழ முடியவில்லை, அவ்வளவு 'வக்கிர' நிலையில் வழுக்குப் பாதையாக இருக்கிறது சமுதாயம்.

வாழப் பிறந்தவர் வசிக்கும் உலகம் இருக்கிறதே, அதன் நிலைமைகளே வேறு! உழைப்பவன் எங்கோ இருப்பான். 'உப்பில்லையே' என்று அழுதகண்ணும் சிந்திய மூக்குமாக கவலைப்பட்டுக் கொண்டு கிடப்பான். அவன் இதயம் அழுகையில் குமுறிக் கொண்டிருக்கும்போது, அவனால் 'வாழ்பவர்கள்' சொகுசாக, சுந்தரமாக, பட்டு மெத்தையில், படுத்துறங்கிக் கொண்டிருப்பார்கள். வெயிலில் அவன் வேதனையுடன் உழைப்பான், இங்கு வெயில் பொசுக்குகிறதே என்று மாளிகையிலிருந்தபடியே, விசிறி சுழன்றும், வியர்வை தாங்காது, துடித்துக் கொண்டிருப்பார்கள்!

விசித்திரமான-ஆனால் வேதனை நிரம்பிய காட்சிதான் வாழப் பிறந்தவர் உலகுக்கும் — வாழ்வு கிடைக்காது வேதனைப்படும் உலகுக்குமிடையே நடப்பது.

* * *

வாழப் பிறந்தவர்களாக இருப்பவர்கள் நிலையே அலாதியானது —தனிப் பாதை கொண்டது. அரசியலில் மந்திரியாக ஆகிவிடுவார்கள். பொருளாதாரத் துறையில் பெட்டியடி பெம்மானாக, ஆகிவிடுவார்கள். உழைக்காது, உடலோம்பி, உல்லாச வாசிகளாய் வெளிநாட்டுப் பிரயாணம் கிளம்பி விருது பெற்று வருவார்கள்! வாழ்வு கிடைக்காது வாடுபவர்களைப் பற்றிச் சிந்தனை, சிறிதுகூட ஏற்படுவதில்லை, அவர்களுக்கு.

(15-ம் பக்கம் பார்க்க)

# புண்ணுக்கு புனுகுபூசவில்லை கீறிவிடப்பட்டிருக்கிறது!!

“பிரதமர் இந்திராகாந்தி கட்சிக் கட்டுப்பாட்டை மீறிவிட்டார்! கட்டுக் கோப்பை உடைத்தெறிந்து விட்டார்!! கட்சித் தலைமைக்கு அடங்கி நடக்கத்தவறிவிட்டார்!” இப்படியெல்லாம் ஒரு பேச்சு, ‘குடியரசுத் தலைவர், தேர்தல் முடிந்த பின்னர். பரவலாகப் பேசப்பட்டு, எழுதப்பட்டு, இப்பொழுது சிறிது ‘ஓய்ந்தது போல்’ இருந்துகொண்டு இருக்கிறது. இருந்தாலும்கூட இன்னும் சிலர், இதுபற்றிப் பேசிக்கொண்டும், எழுதிக்கொண்டும் இருப்பதைக் கண்டு வியப்படையாமல் இருக்க முடியவில்லை. பிரதமர் “பின்புத்தியுடன்” நடந்துவிட்டார் என்றுகூட எழுதத் தொடங்கியுள்ளனர் என்கின்றபொழுது சற்று இந்தக் கூற்றினைப் பற்றிச் சிந்திக்க வேண்டியதாகத்தான் இருக்கிறது. எனவேதான் அமளிகள் “அடங்கியதுபோல் தோன்றும்” இந்நிலையில் இதுபற்றி மீண்டும், அமைதியாக சிந்திக்கின்றபொழுது, பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் நடந்துகொண்ட முறைகள், சரியானவை என்றே எல்லோரும் எண்ணுவர். ஏனெனில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்பொழுது ‘பிரதமர், கட்சிக் கட்டுப்பாட்டை மீறியது தவறு. கட்சிக் கட்டுப்பாட்டிற்கு அடங்கித்தான் நடக்கவேண்டும்” என்றே எண்ணத் தோன்றும். அப்படி இருந்தும், பிரதமரே, கட்சிக் கட்டளையை மீறினார் என்றால் ஏன்? ஒரு கணம் சிந்திகக வேண்டாமா?

கட்சியை ஆட்டிப்படைக்கும், பெருந்தலைவர்கள் சிலர் ஒரு குழுவாக இருந்துகொண்டு அதாவது “சிண்டிகேட்” என பெயர், சூட்டப்பட்டுள்ள அக்குழுவினர். பிரதமருடன், ஒத்துழைக்க மறுக்கின்றனர். அவர் நிறைவேற்ற நினைக்கும், முற்போக்குக் கொள்கைகளுக்கு முட்டுக்கட்டையாக உள்ளனர். இதன் உச்சக்கட்டமாக, குடியரசுத் தலைவராக, தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய வேட்பாளர் யார் என்பதில், சிண்டிகேட்டினரும், பிரதமரும் முரண்பட வேண்டிய ஒரு சூழ்நிலையை உருவாக்கிவிட்டனர்.

கட்சி கட்டளை இடுகிறது என்றால் கட்டுப்பட்டு. நடக்கவேண்டிய பொறுப்பு எல்லோருக்குமே உண்டுதான். ஆனால் இங்கே கட்சி கட்டளை இடுகிறதா? என்றால் இல்லை. மாறாக மறைமுகமாக “சிண்டிகேட்” அல்லவா பிரதமருக்குக் கட்டளை இடுகிறது? ஏன்? கட்சியை காப்பாற்றவா? கட்டுக்கோப்பு சிதறாமல் பாதுகாக்கவா? அல்லது ‘நாட்டின் நலம்” பாதுகாக்கப்படவா?

சிந்திக்க வேண்டும். கட்சிக் கட்டுப்பாட்டினைக் காப்பாற்ற வேண்டுமானால், ஆட்சி பீடத்தில் அமர்ந்து ஆளுகின்றவர்களுக்கு, ஒத்துழைக்க கூடிய, பிரதமருடன் ஒத்துப் போகக் கூடியவரை தேர்ந்தெடுக்க, பிரதமர் விரும்புபோது, கட்சித் தலைமையினர் பிரதமருடன், ஒத்துப் போயிருக்கலாம அல்லவா? அதாவது அவர்கள் (கட்சித்தலைமையினர்) கூற்றுப்படி, மேலே கூறப்பட்டுள்ள, கட்சி கட்டுப்பாடு, கட்டுக்கோப்பு, ஆகியவை காப்பாற்றப்பட செய்யவில்லையே? இதிலிருந்து தெரிவது அவர்களுக்கு (சிண்டிகேட்டுக்கு வேண்டியது கட்சி ஒற்றுமை அல்ல. ‘எப்படியாகிலும் பிரதமரை வலிவற்றவராகச் செய்யவேண்டும் தாங்கள் (சிண்டிகேட்டினர்) இல்லாமல் பிரதமரால் ஒன்றும்செய்ய இயலாது என்கிற சூழ்நிலையையும் உருவாக்கிட முனைந்தனர். தாங்கள் ஆட்டிப் படைக்கும் பொம்மையாக, பிரதமரை ஆக்க நினைத்தார்கள். பிரதமர் கூறியவேட்பாளருக்குஎதிராகத் தாங்கள் ஒரு வேட்பாளரைத் தேர்ந்தெடுத்து, திரு. சஞ்சீவி ரெட்டி பெயரை வெளியிட்டனர், எப்படி

> ## கவனிக்க!
>
> 7-9-69 காஞ்சி’ இதழில் குடியரசுத்தலைவர் தேர்தலில் பிரதமர் இந்திரா காந்தியின் நிலைபற்றி விமர்சித்து கட்டுரை யொன்று வெளிவந்தது. அந்தக் கட்டுரையின் கருத்தை மறுக்கிறார், இந்தக் கட்டுரையாளர். சுவையான வாதம்தொடங்கி இருக்கிறது. பற்றி எரியப்போகிறதோ, என்னவோ!
>
> —ஆசிரியர்.

யும் வெற்றி பெற்றுவிடுவோம் எனும் அசட்டுத்-தைரியத்தில்......பு

சிண்டிகேட்டினர் நினைத்தது போலவே, துரதிருஷ்டவசமாக சிண்டிகேட் வேட்பாளர், வெற்றி பெற்றிருந்தால். “தங்கள் எதேச்சாதிகாரப் போக்கிற்கு வெற்றி என எண்ணி, எந்த அளவுக்குக், கட்சித் தலைமை ஆட்சித் தலைமையில், ஊடுருவி பிரதமரை செல்லாக் காசாக்கி இருப்பார்கள்? ஆழ்ந்து சிந்திக்கவேண்டும்.

குடியரசுத் தலைவர் நாட்டுக்கு பொதுவானவர்தான் என்றாலும் இப்படி முரண்பாட்டு முகாமிலிருந்து முகிழ்த்து வந்திருப்பவர். எந்த அளவுக்குப் பிரதமருடன் ஒத்துப்போயிருப்பார்? அல்லது குடியரசுத் தலைவர் மூலம் சிண்டிகேட்டினர், பிரதமரை எப்படி ஆட்டிப் படைப்பார்கள்? இதையெல்லாம் சிந்தித்தே, பிரதமர் அவர்கள் ‘முன்புத்தியுடன்’ நடந்துகொண்டுள்ளார். ஆனால் மேலே சொன்ன வினாக்களுக்கு விடை தேவை இல்லாமலேயே சிண்டிகேட் வேட்பாளர் தோல்வி அடைந்து விட்டார். தங்கள் வேட்பாளர் தோல்வியைத் தழுவிக்கொண்டார் என்றவுடன் பிரதமர் மீது வெகுணைகளை வீசத் தொடங்கியுள்ளனர் கட்சிக் கட்டளைக்கு, கட்டுப்பட்டு நடக்கவில்லைஎன கூக்குரலிடத்தொடங்கியுள்ளனர்.

பிரதமர் கட்சிக் கட்டளைக்குக் கட்டுப்பட்டு நடக்கவில்லைதான். ஏன்? தன்னையே செல்லாக்காசாக்கிட நினைக்கும்போது, தன்னை கட்சி கூட ஆட்டிப்படைக்க எண்ணவில்லை. மாறாக கட்சியையே; ஆட்டிப் படைக்கும் சிலர் கட்சியின் பேரால் கூடி அமைத்துள்ள கூட்டான சிண்டிகேட், தங்களுடைய எண்ணத்தை, எதேச்சாதிகாரத்தை, நிலைநாட்டிட, ஆட்டிப் படைத்திட எண்ணும்போது கட்சிக் கட்டளையை மீறாமல், ஒரு பிரதமர் எப்படி செயலாற்ற முடியும்? எனவே ஒரு சிறந்த சிந்தனை வளம் படைத்த பிரதமர், நாட்டிற்காக, உடல், பொருள், ஆவி அத்தனையும் அர்ப்பணித்த ஒருபெரிய தியாக பரம்பரையில், வந்திட்ட பிரதமர், “நாட்டின் நலனை”ப் பாதுகாக்க வேண்டிய பொறுப்புள்ள பிரதமர் இப்படித்தானே செயலாற்றியிருக்க வேண்டும்! செயலாற்றியிருக்க முடியும்?

தூய்மையான உள்ளத்தோடு தூய்மையான நோக்கோடு கட்சித்



## 2-11-69 முதல்

### அமரர் அண்ணா அவர்களின்

# கலிங்கராணி

என்ற சிறப்புமிக்க காவியம்,

## தொடர் கதையாக

# காஞ்சியில்

தொடரவிருக்கிறது.

முன்னதாகப் பதிவு செய்துகொள்க!

தலைமை கட்டளை இட்டிருக்குமானால் நிச்சயம் பிரதமர் ஏற்றிருப்பார். அல்லது தூய்மையான உள்ளமும் நோக்கமும் சிண்டிகேட்டிற்கு அதாவது கட்சித் தலைமைக்கு இருக்குமானால், பிரதமருடன் ஒன்று பட்டுப் போயிருப்பார்கள்.

இன்னும் ஆழ்ந்து பார்ப்போமானால், வேட்பாளர்தேர்வு நாட்டுக்குப் பொதுவான, நாட்டை ஆளக்கூடிய இந்தியக் குடியரசுத்தலைவர் பதவிக்குத்தானே, தவிர காங்கிரசு கட்சியின், தலைமைப்பதவிக்கோ, அல்லது கட்சியின் மற்ற பதவிகளுக்கோ அல்ல. இந்தக் கண்ணோட்டத்துடன் பார்க்கும்பொழுது, வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கும் பெரும் பொறுப்பு, கட்சித் தலைமையினரை விட ஆட்சித் தலைமையினருக்கே, அவர்கள் (பிரதமரின்) கருத்துக்கே முதலிடம்கொடுதது கட்சித்தலைமையினர் விட்டுக்கொடுத்திருக்கவேண்டும். எனவே நாட்டுக்குப் பொதுவான ஆட்சிக்கு ஒத்துழைப்பு நல்கக்கூடிய ஒருவரை பிரதமர் தேர்ந்தெடுக்கின்றார் என்கின்ற பொழுது, நாட்டின் நலன் காப்பாற்றப்பட கட்சி ஒற்றுமை ஓங்கிட உண்மையிலேயே எண்ணம் கொண்டுள்ளவர்களாக சிண்டிகேட்டினர் இருந்தால் பிரதமர் தேர்ந்தெடுத்துக் கூறிய வேட்பாளரை ஒருமனதாக ஏற்றிருக்க வேண்டும். அதைச் செய்யாமல் பிரதமரை குறைகூறுவது எப்படிப் பொருந்தும்?

எனவே "நாட்டின் நலன்" காப்பாற்றப்பட ஒருசில பெரியவர்கள் சேர்ந்தால் நாட்டை ஆட்டிப் படைத்து விடலாம் எனும் நைப்பாசையை அழித்தொழித்திட பிரதமர் செயலாற்றி வெற்றியும் பெற்றுவிட்டார். அப்படி வெற்றி பெற்றதில் "நாட்டின் நலம்" துளிகூட பாழ்பட்டுப் போய் விடவில்லை. மாறாக சிண்டிகேட் பெருந்தலைவர்களின் ஆட்டிப்படைக்கும் எதேச்சாதிகார மனப் போக்குதான் பாழ்பட்டுப் போயிருக்கிறது. பிற்போக்குச் சக்திகள் பாழ்பட்டு போயிருக்கின்றன. வாழவேண்டியவைகள் வளமுடன் வாழ்ந்திருக்கின்றன நலம் பெற வேண்டிய "நாட்டின் நலம்" பெரிதும் காப்பாற்றப்பட்டிருக்கிறது. சிண்டிகேட்டின் எதேச்சதிகாரத்தை மாய்ப்பதற்காகவே கட்சி கட்டுப்பாட்டினை மீறி, பிரதமர் செயலாற்றியுள்ளார். எனவே பிரதமரின் செயல்கள், முடிவுகள், போற்றப்படவேண்டியவைகள்! பாராட்டப்படவேண்டியவைகளே!!

*

18-ம் பக்கத் தொடர்ச்சி

'இத்தனை பேர் நம்மை நம்பி இருக்கிறார்களே! நமக்காக வாழ்கிறார்களே, அவர்களைக் கவனிக்க வேண்டியது, அவர்களையும் வாழச் செய்யவேண்டியது, நம் பொறுப்பாயிற்றே' என்ற எண்ணம் எழும்புவதுகூடக் கிடையாது. அதற்குப் பதில் அமெரிக்கா போகப் போகிறோம், அக்காவை அழைத்துச் செல்வோமா, தங்கையையும் இட்டுச் செல்வோமா, மகளுந்தான் கூட வரட்டுமே என்பதிலேயே கவலையும் கருத்தும் பதிந்து கிடக்கும். அரசியல் தலைவர்களாய் — மந்திரிகளாய் — இருந்தால் கேட்கவே வேண்டியதில்லை! அக்கா, முன்னதாகவே அரசியல் தூதராக அனுப்பி வைக்கப்பட்டிருப்பார். தங்கை பிரசங்கம் செய்வதற்காகப் புறப்பட்டுப் போவார், தான் 'விஷயம் அறிந்து வருவதற்காக' விஜயம் செய்வார், மகள் துணைக்கெனக் கூடச் செல்வார்!

இப்படி, வாழமுடியாதவர்கள், தன்னை நம்பிக் கிடக்க, தன் வாழ்வு வசதி ஆகியவைகளையே கருத்தில் வைத்துச் சாதிக்கும் கனதனவான்கள்—வாழப் பிறந்த உலகத்தில்—இன்று, ஏராளமாக இருக்கின்றனர்!

காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளவேண்டும் என்பதுதான் 'அந்த உலகின்' இலட்சியம், ஆசை!

* * *

இரண்டு துருவங்களாக இன்றைய சமுதாயம் இருக்கிறது— எல்லாத் துறையிலும், வாழப் பிறந்தவர்கள், பிறந்தும் வாழமுடியாதவர்கள் என்பதாக. வாழப் பிறந்தவர்கள் வாழ்வு சோபிதமாகிக் கொண்டே போகின்றது! ஆனால். அவர்கள் வாழ்வு மாளிகையின் மாடிப் படிகளாக நிற்கும் ஏழை இதயங்களின் நிலையோ, இன்னும் படுகுழி நோக்கித் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்நிலை மாறுவதென்று? இரு துருவங்கள் சந்திப்பதெப்போது?

---

முகப்பில்:

15—9—69 அன்று சேலத்தில் இந்தியக் குடியரசுத் தலைவர் மேதகு வி. வி. கிரி அவர்கள் தலைமையில் தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் திறக்கப்பட்ட அறிஞர் அண்ணா அவர்களின் உருவச் சிலை.

காஞ்சி ௨௧—௯—௬௯ Regd. No. M. 8326


பிறந்தநாள் வாரத்தில்வெளிவருகிறது!
முந்நூறு பக்கங்கள் காலிகோ பைண்டு!

அறிஞர் அண்ணாவின் திருஉருவப் படம்
போற்றிக் காக்க வேண்டிய பொக்கிஷம்

# அறிஞர் அண்ணாவின்
# சிறு கதைகள்

## முதல் பகுதி

புத்தகம் வேண்டுவோர் முன்பணம் அனுப்பி பெயரை பதிவு
செய்துகொள்ளவும் (செப்டம்பர் முதல் வாரத்திற்குள்)

**பரிமளம் பதிப்பகம்,**
9, அவின்யு சாலை, சென்னை-34.
விலை ரூ. 10


ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-8
88, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.